உ

விக்னேஸ்வரர் துணை.

பார்ஸீ

# சுந்தர் நாடகம்.

இஃது

மதுரைமாநகரம்.

சுந்தர ஜெய வீர சூர தீர கவிராஜ

**கந்தசாமிபிள்ளை யவர்களால்**

இயற்றப்பட்டு,

கோண்ணூர்

**லோகநாதமுதலியாரவர்களால்**

தமது

மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904

Registered-copy right.

இதன்விலை அணா—4.

## புத்தகவிளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| விருத்தாசலபுராணம் உரை | 0 | 10 | 0 |
| திருவாதவூரடிகள்புராணம் உரை | 1 | 0 | 0 |
| சப்தரிஷிவாக்கியம் 5500-பாடல் | 4 | 0 | 0 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | 0 | 8 | 0 |
| திருவாசகம் | 0 | 8 | 0 |
| நந்தனார்சரித்திரகீர்த்தனை | 0 | 8 | 0 |
| விஷ்ணுஸ்தல மான்மியச்சுருக்கம் | 0 | 8 | 0 |
| ருக்மாங்கதன் சரித்திரக்கீர்த்தனை | 1 | 0. | 0 |
| வள்ளலார் சாஸ்திரம்-20. | 1 | 8 | 0 |
| தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு | 1 | 0 | 0 |
| திருமந்திரம்-நகூ | 1 | 8 | 0 |
| ஸ்ரீகுமாரதேவர்சாத்திரம்-16. | 0 | 10 | 0 |
| சூடாமணி நிகண்டு 12 - தொகுதி | 1 | 4 | 0 |
| ஷை 11, 12 - நிகண்டு தனி | 0 | 8 | 0 |
| செய்யுளிலக்கணம் | 0 | 8 | 0 |
| சாதகாலங்காரம் | 0 | 8 | 0 |
| ஜீவரக்ஷாமிர்தம் | 4 | 0 | 0 |
| ஞானவாசிட்டவசனம் | 1 | 8 | 0 |
| வேதாந்தபோதினி | 0 | 8 | 0 |
| சிதம்பரம் இராமலிங்கசுவாமி திருவருட்பா | 2 | 8 | 0 |
| ஞானப்பிரகாசதீபிகை | 1 | 0 | 0 |
| பகவற்கீதை வசனம் | 1 | 4 | 0 |
| பிரபுலிங்கலீலை மூலம் | 0 | 8 | 0 |
| கைவல்யநவநீதம் தத்துவார்த்ததீபஉரை | 2 | 0 | 0 |
| கட்டளைக்கோத்து | 0 | 8 | .0 |
| பஞ்சதசப்பிரகரணம் | 1 | 0 | 0 |
| திருவிளையாடற்புராண மூலம் | 2 | 0 | 0 |
| சேதுபுராணவசனம் படத்துடன் | 2 | 0 | 0 |
| அரிச்சந்திரபுராணமூலம் | 0 | 8 | 0 |
| மனவுல்லாசகதை | 0 | 8 | 0 |

இவைதவிரத் தங்களுக்குவேண்டும் பலவித புத்தகங்களும் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். அரை ரூபாய் தொகைக்குக்குறைந்த புத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்பமுடியாது. அரை அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஒருகேட்லாக்கு இனாமாக அனுப்பப்படும். மற்ற விஷயங்கள்கேட்லாக்கில் கவனித்துப் பார்க்கும்படி கோருகிறேன்.

ரிப்ளைகார்டு எழுதாதவர்களுக்குப் பதில்கிடைக்கமாட்டாது.

கொ - லோகநாதமுதலியார்.

மனோன்மணிவிலாச சென்ட்ரல் புக்டிபோ,

நெ - 29, வைத்தியநாதமுதலிவீதி, சென்னை.

உ

கணபதிதுணை.

# பார்ஸீ சுந்தர் நாடகம்.

## கணபதி தோத்திரம்.

### வெண்பா.

சீரிலகுந் தேவே சிவனு ரருட்சுதனே
பாரிலகும் பாசுரத்தைப் பாடவே—நேரிலகு
மென்குருவிக் னேஸ்வரனே மேன்மைசே ரென்கவிக்குத்
தன்னருளை யன்பாகத் தா.

## அகஸ்தியர் தோத்திரம்.

### வெண்பா.

சங்கீதந் தன்னிற் சகல வெழுத்திணைத்து
மங்களஞ்சே ரும்பனுவல் மாக்ஷியாய்த்—தங்கும்
பகற்காலம் போற்பாட பக்ஷமா யிப்போ
தகஸ்தியரே யுனனருளைத் தா.

---

## நூற்பெருமை

### விருத்தம்.

சீரிலகும் மாநிலத்தில் வாழ்ந் திருக்கும்
செல்வந்தர் சந்ததமும் மனங் களித்து
காரிலகு வானத்தின் மழையைப் போன்ற
கதாசாரம் வையகத்தில் கவனித்தாலும்
தாரிலகும் பதிவிரதா பார்ஸீ சுந்தர்
சரித்திரத்தை வாசித்தால் உலகோர் மெச்சும்
பேரிலகுஞ் சற்குணத்திற் சிறந்து நாளும்
பெருமையுடன் வாழ்ந்திருப்பா ரறிகுவீரே.

## பொது-விருத்தம்.

வையகத்தோர் மதிக்க வர்த்தகஞ் செய்துநாளும்
பொய்மொழி புகன்றிடாத புகழுறும் அப்துல்லாசீஸ்
தையலா ளிறந்த ளென்று சஞ்சலத்தாற் றிகைத்து
ஐயனே மனதிலுன்னி அருஞ்சபை தனில்வந்தானே.

வசனம்.

சேனுங்களையா சபையோர்களே! காபல்தேசத்தின் வர்த்தகனுகிய அப்துல் அசீஸ் தனது மனையாளிறந்த மனவியாகூலத்தினுல் திப்ரமையடைந்து இனி நாம் பற்பல தீவுகளினுஞ்சென்று வர்த்தகஞ்செய்வதற்கு கப்பல்மீதமர்ந்து ஆழிசஞ்சாரியாய்ச் செல்வோமாகில் தாயற்ற சேயர்களாகிய நமது மைந்தர்கள் எவ்வாறு ஜீவிப்பார். அன்றியும், அவர்களின் பசிவேளையறிந்து அன்னங்கொடுத்து ஆதரித் திரக்ஷிக்கும் துணைவ ரொருவருமில்லையே யென்க. துயரடைந்தவனுக மன தைரியத்துடனே கர்த்தன் திருவருளால் எத்தகைய துயரமும் வந்தணுகாதென சிந்தைமகிழ்ந்து சந்தோஷமாய்ச் சபையில்வருகிற விதங்காண்பீர்களையா கனவான்களே.

### அப்துல் அஸீஸ் சபையில்வருகிற-தரு.

இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

அவனியெங்கிலும்புக—ழிலகியவர்த்தகன்
அப்துல்அஸீஸ் வந்தான். (அவனி)

அநுபல்லவி.

தவமியற்றியுதித்த தனயர்களுடனே
நவரத்னங்களவிற்கும் நாகரீகத்துடனே (அவனி)

சரணம்.

காஸ்மீகர்டில்லி காபல்தேசத்திலும்
கனத்தவர்த்தகம் செய்து—பணத்தைச்சேர்த்து
சாஸ்விதமாகவே சஞ்சலமின்றி
சந்தோஷத்தாலெய்தும்
நாஸ்திகமின்றிய நாணயபொருளுடன்
ஆஸ்திபூஸ்திதியொடு அன்புறும்மகிபன் (அவனி)

## அப்துல் அஸீஸ் கடவுளை ஸ்துதித்தல்

விருத்தம்.

உலகெலாம் செழித்துவாழ்க உண்மைபெர் நாளும்வாழ்க
பலகலை யுணர்ந்தோர்வாழ்க பாரிலென் பேரும்வாழ்க
நலமுறும் மைந்தர்வாழ்க நன்மைசேர் நிதியும்வாழ்க
இலகுமிச் சரிதைவாழ்க இரக்ஷிப்பாய் தேவேபோற்றி.

(அலிபக்ஷ்-வசனம்) தந்தையே! மைந்தன் நமஸ்கரிக்கின்றேன்.

(அப்துல்அஸீஸ் வ-ம்) கல்யாண மைந்தா.

## அலிபக்ஷ் சொல்வது

விருத்தம்.

தாயாசை மறக்கவேண்டி சந்தத மெங்களுக்கு
நேயமா யமுதளித்து நேர்மையாய் வளர்த்தசத்ய
தூயனே யுண்மையாக துலங்குமுன் வரத்தால்வந்த
சேயர்க ளன்பிலங்க சேவடி பணிந்தோம்போற்றி.

## அப்துல் அஸீஸ் சொல்வது

விருத்தம்.

எனதுநற் றவத்துதித்து எவர்களும் மதிக்கும்சுத்த
மனதிடங் கொண்டயெந்தன் மைந்தரே சொல்லக்கேளீர்
தனமது சேகரிக்குந் தைரியங் கொண்டிப்போதே
கனமுறுந் தீவிற்சென்று கப்பல்வியா பாரஞ்செய்வோம்.

வசனம்

மைந்தர்காள்! யான் முன்னம் வர்த்தகஞ்செய்வதற் கேகையில் உமது அன்னை உமக்குத் துணையாயிருந்து அன்னவஸ்திரங் குறைவின்றி தந்து ஆதரித்திரக்ஷித்தனள். அவள் இறந்தமையால் இத்தருணம் யான் உம்மைப் பிரிந்து அந்நிய தேசத்திற்கேகி வர்த்தகஞ்செய்துக்கொண்டிருந்தால் உமது பசிவேளையறிந்து அன்னங்கொடுத்து ஆதரிப்பவர் யாவர்? ஆகையால், இனி நாம் இந்நகரிலிருப்பதினா லாய பய னென்? நீங்களும் என்னுடனே யான் செல்லும் தீவுகளில்வந்து ஒருவர்க்கொருவர் துணையாயிருந்து வர்த்தகஞ்செய்து ஜீவிப்பது மிகவும் சிலாக்கியமாகும். ஆகையால், அல்லாவின் ஆதரவால் நாம் இனி ஆழி சஞ்சாரியாய் அநேக தீவுகளிற்சென்று பொன், வெள்ளி, ஈயம், எழுகு, இரும்பு முதலாகியதும்

நவரத்தினங்களும், நவதானியங்களும் அந்தந்த் தீவுகளில் விலை சரசமாய்வாங்கி அடுத்த தேசங்களில் விற்கிரயஞ்செய்து நூற்றுக் காயிரமாக லாபஞ் சம்பாதித்துப் பிழைத்திருப்போம் புறப்படுவீர் மக்களே.

## அலிபக்ஷ் சொல்வது

### கோச்சகம்.

அருமைமிகுந் திலகும் ஆஞா உமக்கினிய
தருமகுண மிலக தற்சமயம் ஆண்டவரின்
கிருபையினல் வியாபாரம் கீர்த்தியுடன் செய்வதற்கு
பெருமையுறும் நற்சரக்கைப் பிரியமுடன் சேகரிப்போம்.

### வசனம்.

ஆஞா ! நீவிர் நவின்றமையனைத்தும் கவனித்துணர்ந்த யானும் அவ்விதமே யோசித்தேன். ஆயினும், நாம் அந்நிய தீவிற்சென்று வர்த்தகஞ்செய்வதற்கு வேண்டிய பலசரக்கு சாமான்களனைத்தும் வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்றோ ? ஆகையால், மிகவும் விற் பனையாகுஞ் சாமான்கள் யாதோ ? அவையனைத்தும் யான்கவனித் துணர்க என்முன் விபரமாய்ப் புகல்வீர் தந்தையே.

## அப்துல் அஸீஸ் சொல்வது

### விருத்தம்.

மைந்தனேயாமிப்போது மரக்கலந்தனிலமர்ந்து
அந்நிய தீவிற்சென்று அரும்பொருள் சேகரிக்க
இந்நகர்தனில்விளங்கும் இனியநற்சரக்கனைத்தும்
நந்நய மாயுரைப்பேன் நலமுடன் கவனிப்பீரே.

### வசனம்.

மைந்தா ! நீ வினவியதும் உண்மையே. அஃதேதெனின் ! யாதாமொரு வர்த்தகஞ் செய்தால் தனது தேசத்தில் அதிகமாய் விளங்கும் சமான்களை விலைசகாயமாய்வாங்கி அந்நிய தீவுகளிற் சென்று நூற்றுக்காயிரமாக லாபத்துடன்விற்கிரயஞ்செய்து திரவி யம் சேகரிப்பது, வர்த்தகத்திற் கிசைந்த் மேன்மையாகும். ஆகை யால், விற்பனைக் கிசைந்த பலசரக்கு சாமான்களனைத்தும் விபர மாய் மொழிகுதும் கவனமாய்க் கேண்மின். ஆண்டவன் கிருபை யால் எனது அருந்தவத்தா லுதித்து அவனியிற் சிறந்திலகும் அறி வமைந்த புத்திரா.

(அலிபக்ஷ்-வசனம்) ஆஞா! அவ்விதமே அந்தந்த பலசரக்கு சாமான்களனைத்தும்விபரமாய்ப் புகல்வீராகில் அவை யனைத்தும் விலை சகாயமாய் வாங்கிக்கொண்டு வெகு சீக்கிரத்தில் வருகிறேன் தந்தையே.

அப்துல்அஸீஸ் சொல்வது

தரு-இராகம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

சொல்லும்நற்சரக்கினி லுள்ளதிற் பலவகை
சோம்பாமல் வாங்குவீரே

அநுபல்லவி.

அல்லல்துயரைத்தீர்க்கும் ஆண்டவன்கிருபையால்
வல்லமையாகவே வர்த்தகஞ்செய்தற்கு (சொல்)

சரணம்.

சுக்குடன்மிளகாயும் சோம்புசீரகம்பாக்கு
சுண்டக்காய்வத்தலும் சீனிசர்க்கரைவெல்லம்
பக்குவமரங்களிற் புளி, மா, கொய்யா, தேக்கு
பலா, வில்வ மிவையாவும் பார்த்துவாங்கிவருவாய் (சொல்)

வசனம்.

மைந்தா! இந்த ஆயிரம் விராகனையும் எடுத்துக்கொண்டுபோய் நமது தேசத்தில் விளங்குவனவாகிய சுக்கு, மிளகு, மிளகாய், சீரகம், பாக்கு, ஏலம், கடுக்காய், சுண்டக்காய் முதலானவையும், நவதானியங்களும், நவரத்தினங்களும் மரதினுசுகளும் விலைசகாயமாய் வாங்கிக்கொண்டு வருவாய் மைந்தா!

(அலிபக்ஷ்-வசனம்) ஆஞா! நீவிர் நவின்றவிதமாய் பலசரக்கு சாமான்களனைத்தும் இதோ வாங்கிக்கொண்டு வந்தேன். இவை யனைத்தையும் கவனித்துணர்ந்து நின் மனதிற்குச் சம்மதந்தானோ! புகல்வீர் தந்தையே.

(அப்துல்அஜீஸ்-வ-மு) மைந்தா! நீவாங்கிக்கொண்டுவந்த சாமான்களனைத்தும் கண்ணுற்ற யான் மிகவும் மனமகிழ்ந்தேன். ஆயினும் இவை யனைத்தையும் கடற்கரை யருகில் இருக்கும் நமது கப்பலிற் கொண்டுபோய்ச் சேர்ப்பாய்.

(அலிபக்ஷ்-வ-ம்) அப்படியே மஹாபாக்கியம், ஆஞா.

(அப்துல்அசீஸ்-வ-ம்) அம்மா ! சுந்தர்.

(சுநதர்-வ-ம்) ஏன் தந்தையே.

(அப்துல்அசீஸ்-வ-ம்) அம்மணி! நமது குலாசாரப்படியே யான் ஆழி சஞ்சாரியாய் பற்பல தீவுகளினுஞ் சென்று வர்த்தகஞ்செய்வ தற்குப் போவதால் தாயற்ற சேயர்களாகிய நீங்கள் இங்ஙனந் தனி யா யிருப்பது நன்கல்ல. ஆகையால், நீங்களும் என்னுடனே வரு வீர்கள்.

(சுந்தர்-வ-ம்) அப்படியே வருகின்றேன் தந்தையே.

---

## பொது-விருத்தம்.

இவ்விதமாய் வர்த்தகன்றன் மைந்தர் தம்மை
இன்பாகத் தன்னுடனே அழைத்துக் கொண்டு
ஒவ்வியே ஆழிதனி லிலகு மந்த
ஒழுங்குடைய கப்பலின்மீ தமர்ந்து செல்ல
எவவுலகுங் கிடுகிடென மழையுங் காற்றும்
இரைச்சலுட னிடிமின்ன லொன்றாய்ச் சேர்ந்து
அவ்வியமாய் கப்பல்தனை யுடைத்த தாலே
அப்துல்அசீஸ் மனமெலிந்து திகைப்ப தானான்.

வசனம்.

கேளுங்களையா ! சபையோர்களே ! அப்துல்அசீஸென்னும் வர்த் தகன் தனது மனையாள் இறந்தமையால் தனது மக்களைத் தனியாய் விடுத்துத் தான் அந்நிய தீவிற்சென்று வர்த்தகஞ்செய்துக்கொண்டி ருப்பது நன்கல்லவென தன்னுடன்அழைத்துக்கொண்டு கப்பல்மீ தமர்ந்து ஆழிசஞ்சாரியாய்ச் செல்லுந்தருணம் அகஸ்மாத்தாய் கப கபவென காற்றும், மழையும் இடி மின்னலைத் துணையாய் வகித்து நெறுநெறென பொழிந்து, திடீரென ஓர் பேரிடி கணகண வென் றொலித்துக கப்பலின்மீது வீழ்ந்து அச்சுவேறு ஆணிவேறாகச் சுக்கல் சுக்கலாய் உடைத்தெறிந்ததும், அப்பால் வர்த்தகருக குற்ற ஆபத்தனைத்தும் விபரம்விபரமாய்ப் புகல்வேன் கவனிப்பீர்களையா கனவான்களே.

## அப்துல்அஸீஸ் சொல்வது

### தரு-௩-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

ஏலேலோ ஏலலிலோ—ஏலலிலோ
ஏலேலோ ஏலலிலோ

சீருளகாயாபுரியில்—நாம்
ஜனித்ததொரு நாள்முதலாய்
பாரிலகவாழ்ந்திருக்க—இன்று
பக்ஷமுடன்வியாபாரம்

செய்யவிப்போதே சிறப்பாயெல்லோரும்
சென்றிச்சரக்கை சிலவாக்கிவிற்று
வையம்புகழவே வன்பொருளாக்கி
வாழலாமைந்தரே தாழ்விலாதென்றும்

ஆ! ஹா! மைந்தரே அநியாயமாக
அலைகடலிற்கப்பல் அமிழ்ந்ததினாலே
ஓ! ஹோ! சாமான்கள் ஒழிந்ததின்றேடே
ஓதிபோற்கடலில் மிதந்திடலானோம் (ஏலே)

### வசனம்.

ஆ! ஹா! மைந்தர்காள்! இஃதென்ன விபரீதம்? நமது வாசஸ்தானமாகிய காபல்தேசத்தை விடுத்து ஆழிசஞ்சாரியாய் அநேக தீவுகளிற்சென்று வர்த்தகஞ்செய்து திரவியஞ்சேகரிப்போமெனும் பேராசையால் கையிலிருந்த பொருளெல்லாம் சிலவழித்து இலக்ஷ விராகன் மதிப்புள்ள பற்பல சாமான்களும் வாங்கிக் கப்பலி லேற்றிக் கொண்டு இந்த காபிரி தேசத்தை நாடிவருகையில் அகஸ்மாத்தாய் காற்றும் மழையும் இடிமின்னலைத்துணையாகக்கொண்டுவந்து நமது கப்பலையும் சுக்கல் சுக்கலா யுடைத்து ஜலத்தில் மூழ்கச் செய்து நம்மையும்இவ்விதமாகிய நிராதரவாய்க் கண்ணீர்த்ததும்பி அழுதுத் துடித்துத் துயரப்படச் செய்தனவே. இனி யாது செய்குவோம் எவ்வாறுஜீவிப்போம் மக்களே!



## பொது-விருத்தம்.

இந்தவிதம் துயருற்று அப்துல்.லாசிஸ்
இனிஎவ்வா றுய்வதென்று மனந் திகைக்க
மைந்தர்களும் மனமெலிந்து பிதாவைத்தேற்றி
மாநிலத்திற் ஜனித்தவரின் சுபாவமென்று
தந்தையே யுணராமல் துயருறுதீர்
தாரணியி லெவ்வித மாயினும் பிழைப்போம்
சிந்தைநொந் துருகாதீ ரென் றிசைப்பத்
திகைத் தழுது வர்த்தகனும் துடிக்கின்றானே

வசனம்.

கேளுங்களையா! சபையோர்களே! இவ்விதமாய் அப்துல்லாசி ஸென்னும் வர்த்தகன் ஆறாத் துயருற்று இனி எவ்வாறு ஜீவித்திடு வோ மென மனந்திகைத்து விசனப்படுவதைக் கண்ணுற்ற பிள்ளை கள் தகப்பனுக்கு அநேக விதவிதமாகிய தைரியவார்த்தை நவின்று. ஆஹா! அவனியிலுதித்தோர் சுக துக்க மிரண்டுஞ் சமமாக அனுப விக்க வேண்டுமென்றி சுக மனுபவிக்குந்தருணம் மன மகிழ்வதும், துக்க மனுபவிக்குந் தருணம் துயரடைவதும் நன்கல்ல. ஆவதும் அழிவதும் ஆண்டவன் செயலன்றி மனச்செயலன்று. அன்றியும், சுக துக்க மனுபவிப்பது மனிதர்கட் கியற்கையான சுபாவ மெனப் புகன்றவை யுணர்ந்த வர்த்தகன் கிஞ்சிற்றேனும் மனதைரியமின்றி துயருறுவதைக் கண்ணுற்ற பிள்ளைகள் தகப்பனாகிய வர்த்தகன் மனதிற் கிசைந்தவிதமாய் பற்பல நீதிசாஸ்திரங்களாலும் தைரிய வார்த்தைப் புகலும் விதங்காண்பீர் கனவான்களே.

## அலிபக்ஷ் சொல்வது

விருத்தம்.

அஞ்சாதிராஞனாளும் ஆண்டவ ருளினாலே
பஞ்சமும்பறந்துபோகும் பாரினில்நமக்கென்னாளும்
மிஞ்சியவறுமைதீரும் மிகுபுகழ்வந்துசேரும்
அஞ்சுதலின்றியாமும் அவனியில்வாழ்குவோமே

வசனம்.

எங்கும் புகழிலங்கும் சிங்கக்குட்டிகட் கிணையாகிய தங்கசணை தட போன்றஎங்களைப்பெற்ற தந்தையே! நீவிர் இத்தகைய துயருறலா

அறியாதவர்களாகிய யாங்களெவ்விதம் ஜீவிப்போம். தந்தையே! இனி நீவிரித்தகைய துயருறாமல் மனதைரியமா யிருப்பீராகில் பகவான் கிருபையால் இந் நகரத்தில் அன்னதரித்திரமின்றி ஜீவித் திருப்போம் அஞ்சவேண்டாம் ஆஞா.

(அப்துல்அஸீஸ்-வ-ம்) ஆ! மக்களே! நம்மைப்போற் சஞ்சலத்திஞற்றிகைத்து, ஆற்ருெஞ ஆபத்திற்சிக்கி துயரப்படுவோர்களவனியிலுண்டோ!

(அலிபக்ஷ்-வ-ம்) ஆஞா! நிடதபுரியைப் பரிபாலனஞ் செய்திருந்த நளச்சக்கிரவர்த்திக்குற்ற ஆபத்தில்ஆயிரத்தி லொரு பங்காகிலும் கவனித்துணர்வீராகி லித்தகைய மனவருத்தமெய்தீர்.

(சுந்தர்-வம்) அண்ணு! நீவிர் மொழிந்த நளச்சக்கிரவத்திக் கெத்தகைய ஆபத்தெய்தி, துயருறச் செய்தனவோ? இதை நமது தந்தை கவனித் துணர்க விபரமாய்ப் புகல்வீர்.

## அலிபக்ஷ் சொல்வது.

### ஆசிரியவிருத்தம்.

சீர்பெற்றநிடதபுரி வேந்தநளராஜனத்
திவ்யகுண வீமராஜன்
செல்விதமயந்தியை மணம்புரிந்தாஞெனின்றுஞ்
சிறுமியொன் றீன்றபின்பு
பார்வேந்தர்மனமகிழ அரசுரிமைபுரிகையில்
பருதிசுதன் சனிகொடுமையால்
பார்ப்பவர்திடுக்கிட புஷ்கரனுடன்சூதாடி
பாரிழந் தடவியுற்று
கார்நிறக்கூந்தலாள் மனைவிமைந்தருமகல
கானரவுதீண்ட வதஞற்
கரியநிறவடிவாகி ரிதுபர்ணராஜனிடங்
காலங்கழித் தவர்க்குத்
தேரோட்டசனிகிருபை யாலிவர் துயரகல
தன்னூரெலாங்கெலித்துத்
தானுந்தன்மனையாளும் மக்களும்வாழ்ந்தனர்
தாணியிற் சிரோங்கவே.

வசனம்.

ஆனால்! ஆதியில் நிடதபுரியைப் பரிபாலனஞ்செய்திருந்த நளச் சக்கிரவர்த்தியானவர் விதர்ப்பபுரிவேந்தனாகிய வீமராஜன் அருந்தவ புத்திரியாகிய தமயந்தியம்மனைத் திருமணம்புரிந்து பெருமையாய் வாழ்ந்திருக்கையில் ஓர் ஆண்குழந்தையும், ஓர் பெண்குழந்தையும் பெற்று மிகவும் மேன்மையாகவளர்த்து மனைவி, மைந்தர்களுடன் சிலகாலம் க்ஷேமமாக ஜீவித்திருக்கையில் சனியீஸ்வரன் புஷ்கர ராஜனிடஞ் சென்று ஓ! அரசனே! இத்தருணமே யானுனக்குத் துணையாக வருகின்றேன், நீ! நிடதபுரிக்குச் சென்று நளமஹாராஜ னுடன் சூதாடி அவனைத்தோற்கச்செய்து அவனுடைய நாடு நகரம் இரத கஜ துரக பதாதி தன தான்யம் யாவும் அபகரித்துக்கொள்வா யென்றிசைப்ப, புஷ்கரன் நன்கெனச்சம்மதித்து, நிடதபுரியில்வந்து நளச்சக்கிரவர்த்தியுடன்சூதாடி அவனுடைய நாடு நகர மனைத்தும் கெலித்துக்கொண்டு ஆரண்யத்திற்குத் துரத்த, நளராஜன் மனந் திகைத்து தன்மக்களை வீமராஜனிடம் அனுப்பிவிட்டு மனையாளுடன் ஆரண்யஞ்சென்று கால வித்தியாசத்தினால் மனையாளைப் பிரிந்து தனியாகச் செல்லுந் தருணம் சர்ப்பததாற் கடியுண்டு விஷாக்கினி யால் தேகம் கறுத்து ரிதுபர்ணராஜனிடம் சுயம்பாகியாயிருக்கை யில் நளனைப்பிரிந்த தமயந்தியம்மன் மனமெலிந்து வனவாசியா யலைந்து தனது தாய் வீட்டிற் சென்று தமக்குற்ற ஆபத்தனைத்தும் ஆதியோடந்தமாய் மொழிந்தவையனைத்தும் கவனித்துணர்ந்த வீம ராஜன் நளச்சக்கிரவர்த்தியை வரவழைப்பதற்கிசைந்த முயற்சியாய் அயோத்திமாநகரத்திற்கு சுயம்வர நிருபமனுப்ப. அந் நகரத்தரச னாகிய ரிதுபர்ணராஜனுடைய ரதசாரதியாக வரும நளச்சக்கிரவர்த் தியின் மீது சனீஸ்வரன் கிருபாநோக்கமெய்தி தர்மசொரூபியாய் விளங்கும் உத்தமனே! இனியானுன்னைத் துயருறச் செய்வதில்லை யென வாக்குதத்தஞ்செய்து இனி எத்தருணமும் சுகஜீவியாய் கீர்த் திப் பிரகாசமாய் வாழ்ந்திருப்பாயென, ஆசீர்வதித்துவிட்டுத்தமது வாசஸ்தானத்திற் கேகினர். அப்பால், நளச்சக்கிரவர்த்தி தனது மனைவிமைந்தரைக் கண்ணுற்று, பேரானந்தமெய்தி தன் சுயரூபத் துடன் விளங்கி புஷ்கரராஜனிடஞ்சென்று மறுபடியுஞ் சூதாடி தனது நாடு நகர இரத கஜ துரக பதாதிகளனைத்தும் கெலித்துக் கொண்டு நவரத்தின கசிதமாய்த் துலங்கும் மணிமகுடஞ் சிரசி லணிந்து சிம்மாசனத்தமர்ந்து, செங்கோலைக்கரத்திலேந்தி துஷ்ட

நிக்ரக சிஷ்டபரிபாலனனென் றவனியோர் புகழ்ந்துரைப்ப, மங்களானந்தமாய் இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்துக்கொண்டு, மனைவி, மைந்தருடன் சுகஜீவியாய் வாழ்ந்திருந்தனர். அத்தன்மையாகவே நமக்கும் நற்காலம் வந்தெய்தும் அஞ்சாதீர் தந்தையே.

(அப்துல்அசீஸ்-வம்) மைந்தா! நாம் காபல்தேசத்தில் மிகவும் மேனமையாக ஜீவித்திருந்தும், "பேராசை பொருள்நஷ்டமென்பதுணராமல்' கையிலிருந்த பொருளெல்லாம் கப்பலி லேற்றிக் கொண்டுவந்து கடலிற்கவிழ்த்து விட்டுக் கவலையால் மனமெலிந்து துயரப்பட லாச்சுதே. இவ் விபரீதத்திற்கு யாது செய்குவோம். இனி எவ்வாறுஜீவிப்போம்.

## சுந்தர் சொல்வது

வெண்பா.

நல்லுறவு மாந்தர் நவிலும் புகழ்கீர்த்தி
அல்லா துணையினல் ஆறுளும—நல்லோர்
சுகதுக்க மெல்லாஞ் சமமாக வெண்ணி
மகிழுறுவ ரென்றே மதி.

வசனம்.

தந்தையே! உலகிற் பிறந்து கீர்த்திப்ரகாசமாய் விளங்கும் சற்குண உத்தமரெனும் விம்வகிகளானவர் சந்ததமும் சிந்தைகலங்காமல் எந்தெந்தகாலத்தில் எப்படிப்பட்ட சுகதுக்கம் வருகின்றதோ? அவையனைத்தையும் யாதொரு மனவருத்தமுமின்றி அனுபவிப்பதன்றி, விசன மெய்துவதா லாய பயனென்? ஆனா! நீவிர் சகல சாஸ்திர புராண நூன்முறை பலவுங் கற்றுணர்ந்து காசினியோர் புகழ்ந்துரைப்பச் சிறப்பெய்திய பெரியோரா யிருந்தும் கொஞ்சமாயினும் மனதைரியமின்றிகொண்டுவந்த சரக்குகளனைத்தும் அநியாயமாய் ஆழியிற்போனவே. என, மனமெலிந்து, மூர்ச்சித்து, தத்தளித்து, இளைத்து, களைத்து, மெய்மறந்து, திகிலுற்றுத் துயருற்றிருந்தால் அறியாதவர்களாகிய யாங்களென்னமாய் மனந்துணிந்து அவனியில் வசிப்போம் தந்தையே.

## அப்துல் அஸீஸ் சொல்வது

தரு-இ-ம்-பார்ஸீ கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆ ! மைந்தரே யாது செய்வோம்
அவனியி லெவ் வித முய்குவோம்
அறிகிலேனே (ஆ)

அநுபல்லவி.

நாமிந்த துயரெய் திடவோ
நகரைவிடுத் திங்ஙனம் வந்தோம்
தாமரை யிலையில் ஜலம்
தத்தளிப்பதுபோலானோம் (ஆ)

சரணங்கள்.

பேராசை கெடுதியென்னவே
பேசும்நூற் பிசகின்றியாமும்
திராசைபாற் கடலி லின்று
திரவிய மிழந்திட்டோமே (ஆ)

சோரகவந்த கப்பலதை
சேர்ந்தகாற் றடித்துமோதியே
திரைகடலில் வீழ்த்தியது
தீவினையின் பாபந்தானோ (ஆ)

எப்படி யாந் திருப்பனோ
எனதுயிர் நிலைத்திருப்பனோ
அப்பப்பாவென் ஆவிசோர்ந்து
அலையுதே தலைவிதியோ (ஆ)

வசனம்.

ஆ ! எனது அருந்தவத்தா லுதித்து நற்குணமமைந்த மக்களே! நாம கிஞ்சிற்றேனும்ஆலோசியாமல் "திரைகடலோடினுந் திரவியந் தேடு" என்பதுபோல, பேராசையைத்துணையாய் வகித்து, நம்மிட மிருந்த பொன் பொருள் ஆஸ்தி பூஸ்திதி யாவும் வீணாகச் சிலவழித்து நவரததின நவதான்னியங்கள்யாவும் வெகு பிரயாசையாய்ச்

சேகரித்து கப்பலி லேற்றிக்கொண்டு ஆழிசஞ்சாரியாய் அநேக தீவுகளிற் சென்று வர்த்தகஞ்செய்து நூற்றுக்காயிரமாக லாபஞ் சம்பாதித்து நவகோடி நாராயணன்போற் கீர்த்திப்ரகாசமாய் அவனியிற் சிறப்புற்றோங்கி வாழ்ந்திருப்போமென்று, ஆசையாக அந்தந்த தீவுகளிற் சிலவாகும் விற்பனைக்கியன்ற பற்பலசாமான்களையும் வாங்கி கப்பலில் ஏற்றிக்கொண்டு, ஆழி சஞ்சாரியாய் வருகையில் நமது பகைஞரைப் போன்ற காற்றும, மழையும் இடி மின்னலைத் துணையாய் அழைத்துக்கொண்டுவந்து கப்பலைச் சுக்கல்சுக்கலாய் உடைத்தெறிந்துவிட்டு சாமான்களையும் கடலிற் கவிழ்த்து, நம்மையும் இத்தகைய நிராதரவான ஏழ்மையாய்த் தத்தளிக்கும் பக்கிரியைப் போற் றிகைத்து, மனமெலிந்து, துயருறச் செய்தனவே யென்று யான் விசனமெய்த லாச்சுதே. இனி நாம் எவ்விதமாய் உலகத்தில் ஜீவித்திருப்போம் மைந்தரே.

அலிபக்ஷ் சொல்வது

தரு-இ-ம்-இந்துஸ்தானி நோட்டு-ஆதிதாளம்.

பல்லவி.

அஞ்சா தீரெம் மானா நீவிர் கருணைநிதியின் கிருபையினால்
வஞ்ச மின்றியே—பஞ்ச மேகிடும்—மிஞ்சும் புகழுறும்
ஆ னா நீர். (அஞ்சா)

அநுபல்லவி.

எல்லாந் தெய்வச் செயலென்று எந்த நாளும் மதித்திருந்தால்
வல்லோன் கிருபையால்—அல்லலாகிய—தொல்லை தீர்ந்திடும்
மென் றறி வீர். (அஞ்சா)

சரணங்கள்.

எத்தனை விதமோதினும் ஏனினி மனமெலிந் திடலானீர்
சித்தந் துடித்திட—சித்த மழுதாலும்—உற்ற துயரெலாம்
போய் விடு மோ (அஞ்சா)

கையைஏந்திஐயமெடுத்திக் காபிரிதேசந்தனில்பிழைப்போம்
நொய்யாதீரினி—துய்யமனத்தின—மெய்யாயுன் துயர்
தீர்த் திடு வீர். (அஞ்சா)

வசனம்

ஆஹா! நீவிர் யாதொன்றுக்கும் அஞ்சாதீர். இந்த காப்பிரி தேசத்தில் நாம் மூவருஞ்சென்று அரிசி, காய், கறி, பதார்த்த வகைகளனைத்தும் யாசித்துக் கொணர்ந்து சமைத்துப் புசித்துப் பசியாறிக்களிப்போம் வருவீர் தந்தையே.

(அப்துல்அசீஸ்-வ-ம்) ஆ! மைந்தா! நாம் ஆதியில் மாநிலத்தோர் புகழுறும் மஹாராஜாக்களைப்போற் சுகானந்தமாய்க் காபல் தேசத்தில் வாழ்ந்திருந்தும் காலவித்தியாசத்தினால் தற்சமயத்தில் இத்தகைய ஆபத்திற்சிக்கி பக்கிரியைப்போல இந்த காபிரிதேசத்தில் ஐயமேற்றுண்பதற்கு எவ்விதமாய் மனந்துணிவோம்.

(அலிபக்ஷ-வ-ம்) ஆஹா! தற்சமயத்திற் கியன்றவிதமாய் நமது வயிற்றை வளர்க்கும்பொருட்டு ஐயமேற்றுண்போமாகில் பகவான் கிருபையால் நமக்கு நற்காலம் வாய்ப்பதற்கிணங்க இந் நகரில்வசிக்கும் தனவந்தர் யாவராயினும் நமக்குத் திரவிய சகாயம்செய்தால் நமது வழக்கப்படியே வர்த்தகஞ்செய்து ஜீவித்திருப்போம் அஞ்ச வேண்டாம் தந்தையே.

(அப்துல்அசீஸ்-வ-ம்) மைந்தா! நீ புகன்றவை யனைத்துங்கவனித்த என் மனம் மிகவும் சந்தோஷமெய்தியது. ஆயினும், நின் கருத்தின்படியே யானும் இந் நகரில் யாசித்துண்க சம்மதித்தேன். வருவீர் மக்களே.

---

## பொது-விருத்தம்.

இவ்விதமாய் வர்த்தகனும் மனந் திகைத்து
இனியெவ்வா றுய்வதென்று யாசித் துண்க
ஒவ்வியே மனந்துணிந்து செல்லும்போது
உத்தமனும் பரோபகா ரிவனைக் கண்டு
எவ்வித மாயினுமிவரை அழைத்துச் சென்று
எஜமானும் ரவ்வுடன்பாற் புகன்று இந்த
செவ்விழியாள் சுந்தரியை மணம் புரிந்து
ஜெகமதனில் வாழ்ந்திருக்க யோசித்தானே.

வசனம்.

கேளுங்களையா சபையோர்களே! இந்தப் பிரகாரம் காபல்தேசத்தின் வர்த்தகனாகிய அப்துல்அசீசென்பவன் தன் மைந்தர்களுடன் ஆழி சஞ்சாரியாய் வருகையில் கப்பலுடைந்து கடலில்வீழ்ந்து நீந்திக்கொண்டு காபிரிதேசத்தின் கடற்கரையில்வந்து தமக்குற்றஆபத்தை நினைந்து ஆற்றொணுத் துயரடைந்து பிள்ளைகள் புகன்ற நன்மொழியால் மனதைரியத்துடன் வருகையில், அந்த நகரத்திலிருக்கும் வர்த்தகனாகிய ரவ்வடீனென்பவனுடைய அடிமையாகிய படீரென்பவன் கடற்கரைவழியாய்வருகையில் வழியிலெதிருற்ற மார்க்கத்தில் எவ்விதமாய் ஜீவிப்போமென மனமெலிந்து தனது மக்களை அழைத்துக்கொண்டு இந்த காபிரிதேசத்திற்சென்று ஐயமேற்றுண்போமென வருகின்ற அப்துல்அசீஸ் அருந்தவப் புத்திரியாகிய சுந்தரியைக்கண்டுஆச்சரியத்துடன் அம்மம்மா இத்தகைய ஜோதிப்பிரகாசமாய் விளங்கும் அழகலங்கார தேஜஸமைந்த தெய்வகன்னிகையைப்போன்ற சிங்காரியை நாமெவ்விதமாயினும் கலியாணஞ்செய்துக்கொள்வதே நமது அதிர்ஷ்டானுகூலத்திற் கியன்ற சிலாக்கியமென்க மனதில் மதித்தவனாய் இவர்களைத் தந்திரமாய் அழைத்துக்கொண்டு தனது எஜமானிடம்செல்லும் விதங்காண்பீர்களையா கனவான்களே.

---

(படீர்-வ-ம்) சலாம் சாஹேப்.

(அப்துல்அசீஸ்-வ-ம்) சலாம் மஹாப்ரபு.

(படீர்-வ-ம்) நீங்களாரையா எங்கு செல்கின்றீர்?

(அப்துல்அசீஸ்-வ-ம்) ஐயா! யாங்கள் வசிப்பது காபல்தேசம். வர்த்தகஞ் செய்வதற்காக ஆழிசஞ்சாரியாய் கப்பலேறிச் செல்லுந் தருணம் காற்றுமழையினால் கப்பலுடைந்துவிட்டமையால் யாங்கள் நீந்திக்கொண்டு கரையில்வந்து இனி எவ்விதமாய் ஜீவிப்போமென விசனப்படலாயினோம் சாஹேப்.

(படீர்-வ-ம்) ஐயா! நீங்கள் இதைக் குறித்து துயரப்பட வேண்டாம். எமது எஜமானாகிய ரவ்வடீன் உமக்கு வேண்டிய திரவிய சகாயஞ்செய்வார் வருகின்றீரா?

(அப்துல்அசீஸ்-வ-ம்) அவ்விதமே வருகின்றோம், அழைத்துக் கொண்டு செல்வீரையா.

(படீர்-வ-ம்) ஆ! ஹா.! கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாற்போலாச்சுது. இனி நமது மனம்போல இந்தப் பெண்ணை நாம் கலியாணஞ்செய்துக்கொள்ளுவோம்.



(ருஸ்வடீன்-வ-ம்) அடா! படீர்! இவர்கள் யாவர்? மெத்த யோக்கியர்போற் றோற்றுது. இந்தப் பெண்ணைப் பார்த்தால் அழகானந்த தேஜஸமைந்த தெய்வ கன்னியைப்போ லிருக்கின்றது. ஆயினும், இவர்களை எங்ஙனமிருந்து அழைத்துக்கொண்டு வந்தனையோ? என் முன் விபரமாய்ப் புகல்வாய்.

(படீர்-வ-ம்) ஐயா! காலை ஐந்து நாழிகைக்குமேல் யான் கடற் கரைவழியாகச் செல்லுந் தருணம் அம் மார்க்கத்தில் ஆதரவற்ற குழந்தைக்கள் தாயை நினைந்து அழுதுக்கொண்டிருக்குந் தன்மை யாய் இவர்கள் மூவரும் இனி எவ்விதமாய் ஜீவிப்போமென்று பகவானை நினைந்து ஆற்றொணு விசனமெய்தி துயரப்படுவதைக் கண்ணுற்ற என் மனந்தாளாமல தரணியோர்புகழும் தர்மசொரூபி யாகிய உம்மிடத்தில் அழைத்துக்கொண்டு வந்தேன். மாநிலத்தோர் புகழும் மஹாப்ரபு! மற்ற சங்கதி யனைத்தும் அவர்களை விசாரித் துக்கொள்வீர்.

## ரவ்வுடன் சொல்வது

விருத்தம்.

ஆரையா நீங்களெந்த அவனியில் வாழ்வோருங்கள்
பேரையு மென்முன்னோதும் பெண்ணுமக் கென்னவேண்டும்
சீரையா சொன்னீரானல் சிலபொரு ளுமக்களிப்பேன்
பாரையா யிதனைப்பெற்று பாக்யவா னுவீர்தானே.

வசனம்.

ஐயா! மிகவும் பரிதாபநிலையுடன் இங்ஙனம் வந்திருப்பவராகிய நீங்கள் யாவர்? உமது எந்ததேசம் இந்தப் பெண்ணும், பிள்ளையும் உமக்கு என்னவேண்டும். இவை யனைத்தும் எனக்கு விபரமாய்ச் சொல்வீராகில் உமக்கு வேண்டிய பொருளுதவி செய்கின்றேன். அதனை வைத்துக்கொண்டு ஏதாயினும் வர்த்தகஞ்செய்து பிழைத்துக் கொண்டிருப்பீர்.

## அப்துல் அஸீஸ் சொல்வது

தரு - இராகம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

காபல்ஷயரினிற் காக்ஷியாய் வாழ்ந்திருந்தோம் ரவ்வடன்-அந்த
காலந்தனிலிந்த பாலர்களைப்பெற்றேன் ரவ்வடன்
ஆபத்துற்றாற்போலென் மனையாளிறந்தனள் ரவ்வடன்-இவரை
அந்நாளிந்நாள்வரை யன்பாய்வளர்த்தேனையா ரவ்வடன்
வர்த்தகஞ்செய்துயான் வன்பொருள்தேடியே ரவ்வடன்-வெகு
வல்லமையாகவே வாழ்ந்திருந்தேனையா ரவ்வடன்
கர்த்தாருளினல் கப்பலேறிச்சென்றேம் ரவ்வடன்-அப்போ
காற்றுமோதியதை கடலிற்கவிழ்த்ததனல் ரவ்வடன்
நீந்திக்கரையில்வந்து நிலைகலங்கிநின்றேம் ரவ்வடன்-இவரால்
காந்திப்ரகாசாயுனை கண்டுமனமகிழ்ந்தோம் ரவ்வடன்
கார்த்தாலும்நீகரை சேர்த்தாலும்நீயேதான் ரவ்வடன்-துயர்
தீர்த்தாளுமெங்கட்கு திக்குவேறில்லையையா ரவ்வடன்

வசனம்.

ஐயா! யான் காபல்தேசத்தின் வர்த்தகன். என் பெயர் அப்துல் அசீஸ். யானென் மனையாளுடன் வாழ்ந்திருக்கையில், அந்தஉத்தமி

இந்தப் பிள்ளைகளைப் பெற்று சிலகாலம் ஜீவித்திருந்து தெய்வச் செயலால் மரணமடைந்தனள். அப்பால், யான இந்தத் தாயற்ற பிள்ளைகளைத் தனியாய்விடுத்துச்செல்வது நன்கல்லவென மதித்து யான் வர்த்தகஞ் செய்வதற் கேகும்போது இவர்களையும் அழைத்துக்கொண்டு ஆழிசஞ்சாரியாய்ச் செல்லுந்தருணம் காற்றும் மழையும் இடிமின்னலைத் துணையாய் வகித்து நெறெநெறென பொழிந்து கப்பலையுடைத் தெறிந்தமையால், யாங்கள் மாத்திரம் ஆவிக் சபாயமின்றி தப்பிப் பிழைத்து நீந்திக்கொண்டு கடற்கரையில்வந்து நாம் கொண்டுவந்த பலசரக்கு சமான்க ளனைத்தும் அநியாயமாய் ஆழியிற் போய்விட்டதே. என, விசனப்படுந் தருணம். இம் மஹானுபாவர் உம்மிடத்தி லழைத்துக்கொண்டு வந்தனர் மஹாப்ரபு!

(ரவ்வடீன்-வ-ம்) ஐயா வர்த்தகரே! நீர் இதனைக் குறித்து மனவருத்தமெய்தாதீர். உமக்குவேண்டியதிரவியம் யான் தருகின்றேன் நீங்கள் முன்போலவே வர்த்தகஞ்செய்து வெகு மேன்மையாய்ப் பிழைத்திருப்பீர். ஆயினும், இவர்களின் பெயரென்ன?

(அப்துல்அசீஸ்-வ-ம்) ஐயா! இவன் பெயர் அலிபக்ஷ். இந்தப் பெண்ணின்பெயர் சுந்தர்.

(ரவ்வடீன்-வ-ம்) இந்தப் பெண்ணுக்கு விவாகமாயிற்ருே?

(அப்துல்அசீஸ்-வ-ம்) இன்னும் ஆகவில்லை.

(ரவ்வடீன்-வ-ம்) வர்த்தகரே! இந்தப் பெண்ணை யான் விவாகஞ் செய்துக்கொள்வதற் கிசைந்தேன். ஆகையால், உமது கருத்தென்னமோ? தெரியப்படுத்துவீர்.

(அப்துல்அசீஸ்-வ-ம்) மஹாப்ரபு! நாம் ஒரு இனத்தினராக இருப்பதினுல் யானும் அவ்விதமே சம்மதித்தேன்.

### பொது-விருத்தம்.

இன்னவிதம்வர்த்தகனும் சம்மதிக்க
　இனத்தினர்கள் சகலரையும்வரவழைத்து
நன்மையாம் முகூர்த்தநாளேற்படுத்தி
　நகரத்தோர்புகழ்ந்திடவே பெருமையாக
கன்னியாம்சுந்தர் ரவ்வடீன்றனக்கும்
　கலியாணஞ்செய்து வாழ்ந்திருப்பீரென்று

அன்புடனாசீர்வதித்து விருந்தருந்தி
அவரவர்களிருப்பிடத்திற் கேகினரே.

வசனம்.

கேளுங்களையா சபையோர்களே! இவ் விதமாய் ரவ்வடனுக்கும் சுந்தரிக்கும் விவாக முகூர்த்த மானவுடனே உற்றார், உறவினர், பந்து, மித்திர ரனைவரும் மதுரமாகிய இனிமைசேர் கனிவர்க்கங்களும், அறுசுவைப் பதார்த்தத்துடன் நாவுக்கினிய திவ்வியான்னமும் புசித்து, யாவரும் அவரவ ரிருப்பிட மேகினர். அப்பால், நடக்கும் விதங்காண்பீர்களையா கனவான்களே.

சுந்தர் சொல்வது

விருத்தம்.

தந்தையே போற்றிபோற்றி தயாபரா போற்றிபோற்றி
எந்தையே போற்றிபோற்றி எங்களாளாவேபோற்றி
சிந்தையிற் கபடிலாதுன் சீர்பாதம் போற்றிபோற்றி
வந்தனஞ் செய்தேனுந்தன் மலரடி போற்றிபோற்றி.

அப்துல் அலீஸ் சொல்வது

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

கண்ணிகள்.

வாழியென் புத்ரிவாழி—அயிர்தகுண
வஞ்சியே வாழிவாழி
வாழியென் னருமைமகளே—எந்நாளும்
வாழிநீ வாழிவாழி

அல்லாஹு அருளுமோங்கி—இந்த
அவனியிற் செல்வமோங்கி
அழியாத கற்பிலங்கி—குறையாத
ஆஸ்தியோடே விளங்கி

கருதுபுகழ் திருவேவாழி—மனதினிற்
கபடிலா உருவேவாழி
கமலமுக வடிவேவாழி—உனதினிய
கணவனும் நீயும்வாழி.

வசனம்.

அம்மணி! சுந்தர்! நீ யாதொரு மனக்கவலையுமின்றி சுகஜீவியாய் மஞ்ஞளனுடன் வாழ்ந்திருப்பாயம்மா.

(ரவ்வடீன்-வ-ம்) நமஸ்காரம் மாமா.

(அப்துல்அசீஸ்-வ-ம்) மாநிலத்தோர் புகழுந்தன்மையாகக் கீர்த்தி வந்தனாக வாழ்ந்திருப்பீர்.

(அப்துல்அசீஸ்-வ-ம்) எனது அன்புக் கிசைந்த மருமகனே! யான் அந்நியதேசங்களிற்சென்று வர்த்தகஞ்செய்வதற்காக ஆலோசித்திருக்கின்றேன்.

(ரவ்வடீன்-வ-ம்) மாமா! நீவிர் புகன்றவை யுணர்ந்த யானும் மனமகிழ்ந்தேன். அஃதேனெனின்! அவனியில் ஜனித்தவரெத்தகையவராயினும் "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்னும் பழமொழிக் கிசைந்த விதமாய் வர்த்தகஞ்செய்து ஜீவிப்பது அவனியில் வாழ்ந்திருக்கும் மாந்தர்கட் கியற்கையான சுபாவம். ஆகலின், இந்த பதினாயிரம் விராகனையும் முதலாக வைத்துக்கொண்டு நவரத்தின வியாபாரஞ்செய்துக்கொண்டிருப்பீர்.

(அப்துல்அசீஸ்-வ-ம்) மஹா சந்தோஷம். நின் சொற்படியே யானும் அந்நியதேசங்களிற்சென்று வர்த்தகஞ்செய்வதற்குச் செல்கின்றேன் மருமகப்பிள்ளையே.

(ரவ்வடீன்-வ-ம்) அவ்விதமே போய்வருவீர்.

## பொது-விருத்தம்.

இந்தவிதம்வர்த்தகனும் சென்றபின்பு
  இருவர்களும்வாழ்ந்திருக்க படுமொன்பானும்
எந்தனுக்கென்றழைத்துவந்த பெண்ணையிந்த
  எஜமானும்ரவ்வடீன் மணம்புரிந்து
மைந்தனைப்போலிருந்தகம்மை மோசஞ்செய்து
  மாபாவியிவனை வஞ்சித்துயாமும்
தந்திரமாய்ச்சுந்தரியை மறுநகர்க்குத்
  தானழைத்துச்செல்வோமென் றெண்ணினானே.

வசனம்.

கேளுங்களையா சபையோர்களே! இவ்விதமாய் அப்துல்அசீஸ் தனது மருமகனாகிய ரவ்வடீனுறகொடுக்கப்பட்ட பதினாயிரம் விராகனையும் பெற்றுக்கொண்டு தனது மைந்தனாகிய அலிபக்ஷையும் அழைத்துக்கொண்டுஅந்நியதேசத்தில் இரத்தினவியாபாரஞ்செய்வதற்குப் போயினன். அப்பால், காபிரிதேசத்தின வர்த்தகனாகிய ரவ்வடீனென்பவன் தனது மனையாளாகிய சுந்தருடன் சுகஜீவியாய் வாழ்ந்துக்கொண்டிருப்பதைப் பார்த்திருந்த படேரென்பவன் மனந்தாளாதவனாய் பொருமைமவகித்து நமது எஜமான் இந்தப்பெண்ணை நமக்கு விவாகஞ்செய்யாமல் அவர் கலியாணஞ்செய்துக்கொண்டு, நம்மை மோசஞ்செய்தனர் பார்த்தனையா! இதற்குத் தானே நாம் இவர்களை இங்ஙனம் அழைத்துக்கொண்டு வருகலாயினோமென்று மனமெலிந்து, சற்றுநேரம் யோசித்து இனி எவ்விதமாயினும் இந்தப் பெண்ணைத் தந்திரமாய்அழைத்துக்கொண்டு அந்நியதேசத்திற்குச் செல்லவேண்டுமென துர்க்குணத்தைத் துணையாய் வகித்து, ஆடை ஆபரண சிங்காரலங்காரமாய் வருகிற விதங்காண்பீர்

படேர் சொல்வது.

விருத்தம்.

அன்னமேமயிலேமானே அழகானசுந்தர்நீயும்
என்மனதிற்கிசைந்து என்னுடன்வருவாயாகில்
இந்நகர்விடுத்துயாமும் இருவருமனமகிழ்ந்து
அந்நியதேசஞ்சென்று அன்புடன்வாழ்ந்திருப்போம்.

வசனம்.

எனது ஆசை நேச விஸ்வாசமிகுந்த அமிர்தவசனியாகிய சுந்தர் நாமிந்நகரி லிருப்பதினாற் சுகமில்லை. ஆகையால். நமக்கு வேண்டிய பொன் பொருள் எடுத்துக்கொண்டு நமக்கிஷ்டமான தேசங்களிற் சென்று மனோல்லாசமாய் வாழ்ந்திருப்போம் வருவாய்.

சுந்தர் சொல்வது

வெண்பா.

கோபிப்பா ரல்லா கொதித்தாசை வையாதே
ஆபத்திற் கார்த்தயென் அண்ணாவே—பாப
பழிவார்த்தை பாஷிப்போர் பாரோ ரிகழ
அழிந்திடுவா ரென்றே அறி.

வசனம்.

அண்ணு! யாது வசனமொழிகுவதாயினீர்? நீர் அநேக சாஸ்திர புராண நீதிநூற் பலவுங் கற்றுணர்ந்த உத்தமராய் இருந்தும் அற்ப மதியால் இவ்விதம் புகல்வது நீதியோ? அன்றியும், உமது வயற்றுககு அன்னங்கொடுத்துஆதரித்திரக்ஷிக்கும் தந்தையைப்போன்ற உன்து எஜமான் மனேயாள் உன்னைப் பெற்றதாய்க்குச் சமானமல்லவோ? இனி இவ்வித அநியாயவார்த்தை வசனிப்பீராகில் பகவானும்மைத் தண்டிப்பார்.

பொது-விருத்தம்.

படுரென்பான்பாஷித்த மொழியுணர்ந்த
பதிவிரதாசுந்தரியும் அவனைப்பார்த்து
கெடுமதியைத்துணையாக வகித்ததுஷ்டர்
கெட்டழிவாரெந்நாளும் மாநிலத்தில்
அடுத்திடாமொழிபுகல வேண்டாமென்று
அநேகவிதநன்மதிகள் சொல்லும்போது
திடுக்கெனவே ரவ்வடீன்ஓடிவந்து
திடீரெனவேபடுரேர்மூக்கை அறுத்திட்டானே.

வசனம்.

இவ்விதமாய் இவர்கள் பேசிக்கொண்டிருக்குந்தருணம் ரவ்வடீன் வந்துவிட்டமையால் படுரென்பவன் சொல்லிக்கொண்டிருந்தவையனைத்தும் கவனித்துணர்ந்து, அம்மம்மா! இனி இந்தத் துஷ்டனைவன் அரைக்ஷணமேனும் இங்ஙன மிருக்கலாகாதென, பல்லைநெறநெறவெனக்கடித்து, "கோபாக்கினி ருத்திரன்போற் சினந்து" அவனுடைய நாசியை அறுத்துத் தூரத்திவிட்டமையால் இனி நடக்கும் விதங்காண்க.

---

சுந்தர் சொல்வது

விருத்தம்.

ஐயையோஅண்ணுயென்ன அநியாயம்உந்தன்மூக்கை
கொய்தனரெந்நாளும் குவலயத்தோர்பழிக்க
துய்யநற்குணமிருந்தால் துயரணுகாமல்நாளும்
மெய்யனென்றெவரும்வாழ்த்த மேன்மையாயிருப்பீரன்றே?

வசனம்.

ஐயையோ! அண்ணா! அநியாயமாய் உமது நாசியறுபட்டுத் துயரப்படலாயினையோ? யாங்கள் திக்கற்ற பரதேசிகளைப் போல ஆற்றொணா துன்பத்தால் இனி எவ்வாறு ஜீவிப்போமென கடற்கரையில் அழுதுக்கொண்டிருக்கையில் எமது குலதெய்வம்போல் வந்து அஞ்சாதீரென ஆதரித்திரக்ஷித்த உமக்கு இத்தகைய ஆபத்தெய்தியதற்குக் காரணம் யாதோ? இந்த பழிபாபத்திற்கு யாது செய்குவேன்.

ரவ்வடன் சொல்வது.

விருத்தம்.

அடாதகாரியஞ்செய்தோர்க்கு அவனியில்துயரமெய்தி
படாதபாடெல்லாம்பட்டு பரதவித்திடுவார்மாதே
விடாதுனை ஆதரிக்கும் வீரனுனிருக்கும்போது
தொடாதுனைஆபத்தென்றும் சுந்தரிநம்புவாயே.

வசனம்.

எனது அன்பிற்கிசைந்த சுந்தர்! நீ அந்த துஷ்டப் பாவியைக் குறித்து விசனப்படவேண்டாம். அவனியில் ஜனித்தமாந்தர்களில் பாபிகளாய்த்திரியும்துர்க்குணத்தினர் பகவானால்ஆக்கினையடைந்து ஆற்றொணா ஆபத்திற்சிக்கி அலைச்சற்படுவது உண்மையாகையால், அந்தப் படுமோசன்பவன் பதிவிரதாசிரோன்மணியாகிய உனது மகத்துவத்தைக் கவனியாமல் மொழிந்த அற்ப வார்த்தையினால் அவனுடைய நாசியறுபட்டுப்போயினன். அன்றியும், உனக்கு எந்நாளினும் யாதொரு துயரமும் வந்தணுகாமற் காப்பாற்றும் யான் இருக்கும்போது உனக்கு யாதொரு ஆபத்தும் வந்தணுகாதென, மனதைரியத்துடன் நம்புவாய் மாதரசே.

சுந்தர் சொல்வது

விருத்தம்.

எந்தன்பிராணனைநாமமை எவர்களுநம்பாபியென்று
நிந்தித்துப்பழிப்பதற்கோ நிஷ்டூரகுணத்தினாலே
மைந்தனைப்போலிருந்த மதியிலான்நாசிதன்னை
னைந்திடஅறுத்தீரையோ ஞாயமோயீதுமக்கு.

வசனம்.

பிராணநாதா! உமது பிள்ளையைப்போல உம்மை நம்பியிருந்த விஸ்வாசத்தையும் கவனியாமல் மனந்துணிந்து அவன் நாசியை அறுத்துத் துரத்தியது நியாயந்தானோ?

என, தனது கையை வீசினவுடனே விரல்நகம் ரவ்வடீன் கண்ணிற்பட்டுக் குருடனாகச்செய்தமையால்அவன் கூச்சலிட்டு கதறியழுதுத் துயரப்படுகையில்அருகிலிருந்தவர் ஓடிவந்து விசாரிக்கையில் நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப் புகன்று, சுந்தரியை அழைத்துக்கொண்டு போகும்படியாக அப்துல்அஸீசுக்கு நிருபமெழுதுவது.

(ரவ்வடீன்-வ-ம்) கணக்கப்பிள்ளை.

(கணக்கப்பிள்ளை-வ-ம்) ஏன் மஹாப்ரபு.

(ரவ்வடீன்-வ-ம்) யான் சொல்வதைப்போல் கடிதத்தி லெழுதிக் கொண்டுவருவாய்.

(கணக்கப்பிள்ளை-வ-ம்) அவ்விதமே எழுதுகிறேன் மஹாப்ரபு.

## அப்துல்அஸீசுக்கு நிருபமெழுதுவது

சீட்டுக் கவி.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டசாந்தகுண அப்துல்அசீசுக்கு
சீரிலக வெழுதுநிருபம்
சிந்தித்துகவனமாய் சங்கதியனைத்தையும்
சித்தம்வைத்துணருமையா
தார்கொண்டமாந்தரில் ரவ்வடீனென்னிலோ
தருமகுண சாந்தனென்றும்
தன்வந்தனென்றுமன தைரியவானென்றுமித்
தரணியோர் புகழும்நல்ல
பேர்கொண்டயெந்தனைப் பாவியாமுன்னுடைய
பெண்ணாகுஞ் சுந்தர்கையால்
பேச்சுதடுமாறவென் கண்ணத்தறைந்தனள்
பெட்புறுங் கண்கலங்கி

கார்கொண்ட இருளாகி குருடாகினேனினி
கண்யனே இத்தருணமுன்
கன்னியையழைத்தேகு மினியரைகூணமும்யான்
கருதேனப் பாவிதனேயே.

இங்ஙனம்,
ரவ்வடீன்.
காபிரிதேசம்.

(கணக்கப்பிள்ளைவ-ம்) ஐயா! நீர் மொழிந்தவை யனைத்தும் சரியாய் எழுதினேன் மஹாப்ரபு.

(ரவ்வடீன்-வ-ம்) சரி. அடா! சோக்கரா.

(சோக்கரா-வ-ம்) ஏன் பிரபு.

ரவ்வடீன்-வ-ம்) இந்த நிருபத்தை நவரத்தினவர்த்தகஞ்செய்யும் அப்துல்அசீசுக்குக் கொடுத்துவிட்டுவருவாய்.

(சோக்கரா-வ-ம்) அவ்விதமே செல்கின்றேன் மஹாப்ரபு.

சோக்காரவென்பவன்அப்துல்அசீஸைத் தேடிக்கொண்டு
போதும் வழியில் ரவ்வடீனால் நாசியறுபட்ட
படீரென்பவன் துயரப்படுவது.

---

படீர் சொல்வது

தரு-இ-ம்-இந்துஸ்தான் காம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

ஜோதிப்ரகாசா நாசியிழந்தேனே (ஜோதி)

அநுபல்லவி.

ஆதிதேவனே இந்த அநியாயம் யாரோ (ஜோதி)

சரணங்கள்.

அல்லற்றுயரத்தால் அவஸ்தைப்புற்றதுமன்றி
தொல்லுலகோரெலாம் பழித்திடலானேன் (ஜோதி)

விதிவசமோவிது விசனமெய்திடலானேன்
கதிநீயெகார்த்தருள் கர்த்தாயுனைநம்பினேன் (ஜோதி)

ரவ்வடன் துணையென நம்பியதற்கெனை
இவ்விதமாயழுது திகைத்திடச்செய்தானே (ஜோதி)
தீராத்துயரினி திக்கெனக்காரையா
நேராகவந்தெனைக் காருமென்னையா (ஜோதி)

வசனம்.

நமது நாசியறந்து துயரப்படுவதற்கு நாமே காரண மென்பதற்குச் சந்தேகமில்லை. அஃதேதெனெனின்! அந் நாளில் கடற்கரையிற் சஞ்சலத்தாற் றிகைத்து, ஆதரவில்லாமல் அழுதுக்கொண்டிருந்த அப்துல்அசீஸ்முதலானவர்களை ரவ்வடன்முன் அழைத்துவராவிடிலெனது நாசியறுபடாமல் சுகமாயிருப்பே னன்றோ?

(சோக்கரா-வ-ம்) ஐயா! பதேர் ஏன் ஆரண்யததில்வந்து மனவியாகூலத்துடன் அழுதுக்கொண்டிருக்கின்றீர்.

## பதேர் சொல்வது

தரு-இராகம்-கண்டா-அடதாளம்.

கண்ணிகள்.

சகாயம்செய்யப்போய் அபாயம்வந்துதையா சோக்கரா-மன
சஞ்சலம்வாய்ந்ததைச் சாற்றுவேன்கவனிப்பீர் சோக்கரா

தாய்தந்தைசொற்கேளா பேய்போற்றிரிந்துயான் சோக்கரா-அந்த
தனவந்தரவ்வடன் துணையென்றடுத்தேனே சோக்கரா

திக்குவேறில்லையெனத் தியங்கித்தவிப்போரை சோக்கரா-யான்
தெரியாமல்ரவ்வடன் முன்னழைத்துவந்தேன் சோக்கரா

அன்பாய்சுந்தரியை அழைத்துச்செல்வோமென சோக்கரா-நினைந்த
ஆசையொழிந்தெந்தன் நாசியிழந்தேனே சோக்கரா

வசனம்.

அப்பா! சோக்கரா! என் காலவித்தியாசத்தை நினைக்க நினைக்க ஆற்றொணாத் துயர்மிகுந்து, மனவருதத மெய்துகின்றன. அஃதேதெனெனின் ஆதியில் யான் துஷ்டசகவாசம் பிராணசங்கட மென்பதுணராமல் அவனியோ ரிகழும் அற்பருடன் நட்பெய்தி எனது தாய் தந்தையரின் சொற்கேளாமல் பேயனைப்போற் றிரிந்து, பாவியாகிய ரவ்வடனைத் துணையென்று நம்பிவந்து அவனுடைய ஊழிய

னைப்போல அவனுக்கிசைந்த ஏவலாளியாயிருந்தது அனைவருக்கும் தெரிந்தவிஷய மன்றோ? ஆயினும், யான் ஓர்நாள் கடற்கரை வழி யாகச் செல்லும்போது கப்பலுடைந்து கடலில் மூழ்கிவிட்டதென மனந்திகைத்து இனி எவ்வாறு ஜீவிப்போமென்று ஆற்றொணா விசனத்துடன் அழுதுக்கொண்டிருந்த அப்துல்அசீஸ் முதலானவர்களைப் பார்த்தவுடனே என் மனந்தாளாமல் இவர்களை நமது எஜமானிடம் அழைத்துசசென்றால் அவர்களுக்கு வேண்டிய பொன் பொருள்தந்து, சுந்தரியை நமக்கு விவாகஞ்செய்துவைப்பாரென நினைந்து அவர்களை ரவ்வடன் முன்பாக அழைத்துக்கொண்டு சென்றவுடனே அவன் சுந்தரியையும் கலியாணஞ்செய்துக்கொண்டு எனது நாசியையும் அறுத்துத் துரத்தினனே. இது நியாய்ந்தானோ கவனித்துணர்வீர்.

### சோக்கரா சொல்வது

தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

அநியாயமா யிந்த ஆபத்தெய்திய வென
மனமெலிந்திடலாமோ

அநுபல்லவி.

மனிதர்களாகவே மாநிலத்திலுதித்து
வினையாலெய்துவதெல்லாம் அனுபவிப்பதலலாமல் (அநி)

சரணங்கள்.

பாபபுண்ணியத்தினால் வாய்த்தசரீரமென்று
பகுத்தறியாமற்சும்மா பாதவிப்பதுநன்றோ
தீபப்ரகாசமென் றிலகுஞ்சர்வேசன்றன
திருவடியைத்துதித்தால் தீவினையொழிந்திடும் (அநி)

உலகாளும்மன்னரையும் ஊழ்வினைவிடுத்ததோ
உத்தமா கவனிப்பீர் பூதலந்தன்னிலே
நிலவுஞ்சிலதுகாலம் இருளுஞ்சிலதுகாலம்
நிதானித்துக்கவனிப்போர் நித்யஞானிகளாகும் (அநி)

தாழ்வுவந்துதேயென்று சஞ்சலப்படவேண்டாம்
தைரியமாயிருப்பீர் தாரணியிலெந்நாளும்

வாழ்வுஞ்சிலதுகாலம் வறுமைசிலதுகாலம்
வருத்தாற்சுகதுக்கம் இரண்டும்சமமாய்த்தோற்றும் (அரி)

வசனம்.

ஐயா! படேர்சாஹேப்! பூமியில் மனிதனுகப் பிறந்தவர்களெல்லாம் எந்தெந்தகாலத்தில் எப்படிப்பட்ட கஷ்ட நிஷ்டூரத்தை அனுபவிக்கவேணுமோ அவை யனைத்தும் அனுபவித்துத் தீரவேண்டுமல்லாமல் விசனப்படுவது நன்கல்ல. ஆகையால், நீ எந்நாளினும் பகவானைத் தியானித்துக்கொண் டிருப்பீராகில் மலைபோன்ற துயரமெல்லாம் பனிபோற் நீங்குவிடுமென் றெண்ணுவீர்.

## படேர் சொல்வது

தரு-இ-ம்-கண்டா-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆருக்கும்யாதொரு அநியாயஞ்செய்யவில்லை சோக்கரா-என்
அறிவீனத்தாலிந்த அபகீர்த்தியாச்சுதே சோக்கரா

அழகானசுந்தரியை மணம்புரிவோமென்று சோக்கரா-யான்
ஆசையாயிருந்ததால் நாசியிழந்தேனே சோக்கரா

அநியாயமாயிந்த ஆரண்யந்தனில்வந்து சோக்கரா-யான்
அழுதுதுடித்திடவும் ஆதிநாள்தீவினையோ சோக்கரா.

(சோக்கரா) ஐயா படேர் சாஹேப் வீணுக விசனப்படாதீர். யான் சென்றுவருகிறேன்.

(படேர்-வ-ம்) எங்ஙனஞ் செல்கின்றாய்.

(சோக்கரா-வ-ம்) சுந்தர் தகப்பனுகிய அப்துல்அசீசுக்கு இந்தக் கடிதத்தைக் கொடுப்பதற்காகச் செல்கின்றேன்.

(படேர்-வ-ம்) யாது காரணமாய்ச் செல்கின்றாய்.

(சோக்கரா-வ-ம்) ஐயா! உனது நாசியை அறுத்தெறிந்த ரவ்வடனே சுந்தர் முகத்தி லறைந்து கண்ணைக்கலக்கி குருடனுகச்செய்தமையால் அவனுக்குக் கோபம்பிறந்து சுந்தரியை அழைத்துச் செல்லும்படியாக அப்துல்அஸீசுக்குக் கடிதமெழுதி என்னிடந் தந் தனுப்பினர்.

(படீர்-வ-ம்) சரி! அநியாயமாய் என்து நாசியை அறுத்த பாவியாகிய அவன் கண்ணிழந்த குருடனாய்த் தவிப்பது தெய்வச் செயலென்றுதான் மதிக்கவேணடும. ஆயினும், நீ! இந்தக் கடிதத்தை அப்துல்அசீசுக்குக் கொடுத்தவுடனே அவன் தனது புத்திரியாகிய சுந்தரியைஅழைத்துக்கொண்டு செல்வானாகில் யான் எவ்வித மாகிலும் தந்திரமாய் வசப்படுத்திக்கொள்வேன். நீர் போய்வருவீர். இதுதான் தகுந்தயோசனை.

சோக்கரா கானகந்தை விடுத்து நகரிற்சென்று
நவரத்தின வர்த்தகஞ் செய்திருக்கும்
அப்துல்அசீசுக்குக கடிதந்தருவது.

---

## சோக்கரா சொல்வது

விருத்தம்.

சலாமையா அப்துல்லாசீஸ் சாற்றுமென்வார்த்தைகேளும்
குலாமுடீக்காகுஞ்சோக்ரா கூறுவதென்னவென்றால்
நிலாவொளிரவ்வடீனும் நிருபமொன்றனுப்பிவைத்தார்
கலாபனையில்லாமற்றன் கவனமாய்வாசிப்பீரே.

வசனம்.

ஐயா! தரணியோர் புகழுந்தன்மையாய்க் கீர்த்திவாய்ந்த வர்த்தகரே! எமது எஜமானாகிய ரவ்வடீனென்பவர் உமக்கு நிருபமெழுதி அனுப்பினார் பெற்றுக்கொள்வீரையா.

(அப்துல்அசீஸ்-வ-ம்) மெத்த சந்தோஷம். அவருக்கு என் வந்தனம் சொல்வீர்.

(சோக்கரா-வ-ம்) நல்லதையா.

(அப்துல்அசீஸ்-வ-ம்) மைந்தா!

(அலிபக்ஷ்-வ-ம) ஏன் தந்தையே.

(அப்துலஅசீஸ்-வ-ம்) இந்தக் கடிதத்தை வாசிப்பாய்.

(அலிபக்ஷ்-வ-ம்) சரி! அவ்விதமே வாசிக்கின்றேன் கவனிப்பீர் தந்தையே.

ரவ்வடீன் அனுப்பிய நிருபத்தை அலிபக்ஷேன்பவன்
அப்துல்அசீஸ் முன்பாக வாசிப்பது.

அலிபக்ஷ் சொல்வது

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டசாந்தகுண அப்துல்அசீசுக்கு
சீரிலக வெழுதுநிருபம்
சிந்தித்துகவனமாய் சங்கதியனைத்தையும்
சித்தம்வைத்துணருமையா
தார்கொண்டமாந்தரில் ரவ்வடீனென்னிலோ
தருமகுண சாந்தனென்றும்
தனவந்தனென்றுமன தைரியவானென்றுமித்
தாணியோர் புகழும்நல்ல
பேர்கொண்டவெந்தனைப் பாவியாமுன்னுடைய
பெண்ணாகுஞ் சுந்தர்கையால்
பேச்சுதடுமாறவென் கன்னத்தறைந்தனள்
பெட்புறுங் கண்கலங்கி
கார்கொண்டஇருளாகி குருடாகினேனினி
கண்யனே இத்தருணமுன்
கன்னியையழைத்தேகு மினியரைக்ஷணமும்யான்
கருதேனப் பாவிதனையே.

வசனம்.

தந்தையே! யான் வாசித்த இந்த நிருபத்தில் எழுதியிருக்கும் சங்கதியனைத்தும் கவனித்தீரன்றோ?

(அப்துல்அசீஸ்-வ-ல்) மைந்தா! சுந்தர் செய்த கொடுமையைப் பார்த்தனையா! நாம் ஆற்றொணு ஆபத்தாற்றிகைத்து அவனியிலெவ்விதம் ஜீவிப்பதென மனமெலிந்து திகைத்திருக்கையில் நமது குலதெய்வம்போல் காப்பாற்றி இரக்ஷித்த கருணகாரனாகிய ரவ்வடீனைத் தனது மணாளனென்று கிஞ்சிற்றேனும் மதியாமல் அவன் முகத்தி

லறைந்து கண்ணைக் கலக்கிக் குருடனாகச் செய்தனள். ஐயோ! இஃதென்ன அநியாயம். மைந்தா! நீ இத்தருணமேசென்று குரூர மனத்தினளாகிய அந்தப்பாவியை கானகத்தில் அழைத்துசசென்று கழுத்தை யறுத்துக் கழுகுக் கிரையாகச் செய்துவிட்டு சீக்கிரமாய் வருவாய்.

(அலிபக்ஷ-வ-ம்) நல்லது தந்தையே.

அலிபக்ஷென்பவன் ரவ்வடன்முன்வந்து சங்கதியை
விசாரித்துணர்ந்து தனது சகோதரியாகிய
சுந்தரியை அழைத்துச்செல்வது.

(அலீபக்ஷ-வ-ம்) மைத்துனா! இன்றைக் கென்ன ஓர்வித மன வருத்தமாயிருக்கின்றீர்.

ரவ்வடன் சொல்வது

தரு-இ-ம்-ஜம்பை-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

என்விதியையாதென்று எடுத்தோதுவேனுமக்கு
நன்மனதாய்க்கேளுமையா நிகழ்ந்தவையனைத்தும்.

துஷ்டபடேரென்பவனும் சுந்தர்முன்னேவந்துநின்று
இஷ்டமுடன்மறுதேசம் வருகுவாயென்றழைக்க

ஓடிவந்துயானிங்கு உண்மையெல்லாந்தானுணர்ந்து
காடிவந்ததுஷ்டனின்றன் நாசியறுத்திட்டேன்

ஆனதினால்சுந்தர்கையால் அறைந்தனளென்திருமுகத்தில்
போனதையாஇடதுகண்ணும் போதுமுங்களுற்றவு.

வசனம்.

ஐயா! ஓர் நாள் படேரென்பவன் நானில்லாத சமயத்தில் உனது சகோதரியாகிய சுந்தர் முன்பாகவந்து பெண்ணே! நாம் இந்நகரை விடுத்து மறுநகரிற்சென்று மனோல்லாசமாய் வாழ்ந்திருப்போம் வருவாயென்றழைத்தனன். அத்தருணம் யான் வந்து அவனுடைய

நாசியை யறுத்துத் துரத்தினேன். அதற்காக சுந்தர் என் முகத்தில் அறைந்து கண்ணைக் கலக்கிக் குருடனாகச் செய்தனள். ஆகையால யான் உங்களுக்குச்செய்த உபகாரத்திற்குப் பதிலுபகாரமாய் நேத்திர மிழந்து, துயரப்படலாச்சுது. இனி உமது சகோதரியை அழைத்துக்கொண்டு செல்வீரையா.

(அலிபக்ஷ-வ-ம) அம்மா! சுந்தர்.

(சுந்தர்-வ-ம) ஏன் அண்ணா.

அலிபக்ஷ சொல்வது.

விருத்தம்.

அன்புடனாதரித்த ஐயனும்ரவவடன்றன்
வன்மைசோகண்கலங்க அடித்ததுநீதிதானோ
நன்மைசெய்தவர்களுக்கு நாடுமோதீங்குசெய்ய
என்னமாய்மனந்துணிந்து இவ்விதகொடுமைசெய்தாய்.

வசனம்.

அம்மணி! நீ சகல சாஸ்திர புராண நூன்முறை பலவுங் கற்றுணர்ந்த பதிவிரதா சிரோன்மணியா யிருந்தும சற்றேனும கவனித்துணராமல நமது குலதெய்வத்தைப்போன்ற உனது மணாளனை குருடனாகச்செய்தது நியாயந்தானோ?

(சுந்தர்-வ-ம்) அண்ணா! இவை யனைத்தும் தெய்வச்செயலன்றி மனசசெயலலல. அஃதேனெனில் இவர் அநியாயமாய் ஏழையாகிய பாலெனபவன் நாசியை யறுத்துத துரததியதைப் பார்தது என் மனந்தாளாமல இவ்வித குரூரகுண மமைந்த கொடுமைசெய்வது நீதியோ வென, என் கையை வீசினமையால விரலின் நகம இவர் கண்ணிறபட்டு குருடனாகசசெய்தது. இதறகு யானென்ன செய்குவேன் அண்ணா.

(அலிபக்ஷ-வ-ம்) அம்மா! நீ சொல்வதும் உண்மையே. ஆயினும், நமது தந்தை உன்னை அழைத்துவரும்படியாகச சொன்னார் வருவாயம்மா.

(சுந்தர்-வ-ம்) அண்ணா! அவவிதமே வருகின்றேன்.

அலிபக்ஷேன்பவன் தனது சகோதரியாகிய சுந்தரியை
ஆரண்யத்தில் அழைத்துக்கொண்டுவந்து
கழுத்தையறுத்துக்கொல்வதற்கு
கத்தியை ஓங்குவது.

---

(சுந்தர்-வ-ம்.) ஆ! அண்ணா! என்னை அநியாயமாய்க் கொல்வதற்கு மனந்துணிந்து கத்தியை ஓங்குவது தர்ம்மமா?

(அலிபக்ஷ-வ-ம்.) அம்மா! நீ உனது மணாளனாகிய ரவ்வடீனை குருடனாகச் செய்தமையால் நமதுதந்தைஉனது கழுத்தையறுத்து கொன்றுவிடும்படி சொன்னார். இந்தப் பழி பாபத்திற்கு யானென் செய்குவேனம்மா.

சுந்தர் சொல்வது

தரு-இ-ம்-சஹானா-ஆதிதாளம்.

பல்லவி.

அண்ணாநீரிவ்வித அநியாயம்செய்வது
அடுக்குமோ மாநிலத்தில் (அண்ணா)

அநுபல்லவி.

பெண்ணென்றால்பேயுமன மிரங்குமென்பதுணரா
பெரும்பழிசுமந்திந்த பேதையைக்கொல்லவந்தாய் (அண்ணா)

சரணங்கள்.

சீரிலகுமுலகில் ஸ்திரீஹத்திசெய்யலாமோ
சிந்தித்துணர்வீரண்ணா
பாரில்நரஜனனம் வாய்ப்பதருமையென்று
பகரும்பெருமையெல்லாம் பழியேற்றுக்கொள்வதற்கோ (அண்ணா)

நயவஞ்சகமாக நன்மொழிபாஷித்து
நமதுாதனைப்போல
பயங்கரமானகாட்டில் அழைத்துவந்தெனைக்கொன்று
பிரபியாய்த்திரிவதுன் பாக்கியமோசொல்வீர் (அண்ணா)

ஓரன்னைவயிற்றினில் ஜனித்தவிஸ்வாஸத்தை
யோசித்துணராமல்

நீரென்னைக்கொல்வது நீதியோகவனிப்பீர்
நீர்மேற்குமிழியான நிலையிலர்வாழ்வன்றோ (அண்ணா)

சிசுஹத்திபிரம்மஹத்தி ஸ்திரீஹத்திநரஹத்தி
செய்தாற்பாபமன்றோ

விசுவாசமின்றிய வெறியனைப்போலாக
வீணுகமாநிலத்தில் வினைதேடிக்கொள்வதானீர் (அண்ணா)

தர்மசொரூபியென தரணியில்வசிப்போர்க்கு
சஞ்சலமணுகாது

கர்மத்திலுழலாமல் கர்த்தனருள்வாய்ந்து
காசினியிலிருப்போர் கருதும்ஞானிகளாகும் (அண்ணா)

வசனம்.

நமதுதந்தை தனக்குமதியில்லாமற்சொன்னபோதிலும், நீர்சகல சாஸ்திர புராண நூன்முறை யனைத்தையுங் கவனித் துணர்ந்து நன் மனதமைந்தவரா யிருந்தும் சற்றேனும் ஆலோசித் துணராமல் குருரகுணத்தைத் துணையாய் வகித்துக் கொலைபுரியும் பாபிகளைப் போற் பஞ்சமாபாதகங்களிலுங் கொடிய ஸ்திரீஹத்தி புரிவதற்கு மனந்துணிவது தர்மமா? உலகில் வசித்துலாவும் மாந்தர்களில் ஆத்மதுரோகி, குருத்துரோகி, பிதாத்துரோகி, சகோதரத்துரோகி களைப்போல நயவஞ்சகமாய் என்னை மனிதசஞ்சாரமில்லாத பயங் கரமாகிய ஆரண்யத்தில் அழைத்துக்கொண்டுவந்து கொன்றுவிடு வதற்கு மனந்துணிவது நீதியோ? அன்றியும், அண்ணா! நாம் இரு வரும் ஒரு தாய் வயற்றிற் பிறந்த சகோதரவாஞ்சையையுங் கவனி யாமல் என்னைக் கொன்றுவிடுவீராகில் மறுபடியும், நாம் ஒருதாய் வயற்றில் ஜனிப்பதருமையன்றோ? கவனித்துணர்வீர்.

அலிபக்ஷ் சொல்வது.

தரு-இ-ம்ரிந்துஸ்தான்காபி-அடதாளம்.

அம்மா சுந்தர் இப்படியாமென
அல்லா கட்டளையோ

இம்மாநில மீது இருந்தும்பல னேது
நம்மாலினி யாது நாயகன்புக ழோது
நாடாது துயரென் றெண்ணுவாய்.

வசனம்.

அம்மா! உலகில் ஜனித்த மாந்தர்கள் தமக்கு தெய்வச்செயலால் வந்தெய்தும் சுக துக்கங்களைச் சமமாக அனுபவிக்க வேண்டு மல்லவோ? ஆகையால, நீ யாதொன்றுக்கும் பயப்படாமல் இங்ஙனமே வீற்றிருப்பாயாகில் பகவான் கிருபையால் உனக்கு நற்காலம் வரும்போது சுகஜீவியாய் வாழ்ந்திருப்பாயம்மா.

(சுந்தர்-வ-ம்) அண்ணா! உமது சொற்படியே இந்த ஆரண்யத்தில வசித்திருக்கின்றேன. நீர் போய்வருவீர அண்ணா.

(அலிபக்ஷ-வ-ம்) நல்லது போய்வருகிறேனம்மா.

அலிபக்ஷ் போய்விட்டபிறகு சுந்தர் ஆரண்யத்தில்
பகவானை நினைந்து துயரப்படுவது.

சுந்தர் சொல்வது

தேவாரம்.

தொல்லுலகினிற்பிறந்து துயரடைந்தேக்கமுற்று
வல்லமையின்றியானும் வாடுமெனக்கமைத்த
அல்லலைப்போக்கியென்னை ஆதரிப்பாயென்றுன்னை
பல்லாண்டும்பணிந்தேனையா பக்தர்கள்சகாயாபோற்றி.

பொது-விருத்தம்.

அந்தமுளசுந்தரியும் மனந்திகைத்து
ஆரண்யமார்க்கமாய் வருகும்போது
சுந்தரஅம்தாநகரின அரசனுந்தான்
சூரர்களாம் வேடவில்லியர்களோடு
மந்திரிபிரதானியரை யழைத்துக்கொண்டு
மாவனத்திலெவ்விடமுங் கூட்டமாக
வந்திருக்கும்மிருகங்கள் மிரண்டோட
வனவேட்டையாடுதற்கு வருகின்றாரே.

வசனம்.

இவ்விதமாய் சுந்தர் தனது காலவித்தியாசத்தை நினைந்து, ஆற்றொணு விசனமடைந்து, பசிவேளைக்கு விருக்ஷங்களிற் காய்த்துப் பழுத்திருக்கும் கனிவர்க்கங்களைப் பறித்துப்புசித்து ஜலபானஞ்செய்து பசி தணிவதுமாய் ஆரண்யவாசியா யலைந்து, கானகமார்க்கமாய் அம்தாநகரின் நந்தவனத்தில் வந்திருக்கையில் அந்நகரத்தரசனுகிய ஆஜம்ஷாவென்பவன் தனது மந்திரி பிரதானியருடன், வேட வில்லியரை அழைத்துக்கொண்டு காட்டில் வசித்துலாவும் மிருகங்களை நாற்புரமுந் துரத்தி வேட்டையாடுதற்கு வருகிற விதங் காண்பீர் சபையோர்களே-

## ஆஜம்ஷா சொல்வது

விருத்தம்.

மந்திரியுரைப்பக்கேண்மின் வையத்தோர்மனந்திகைக்க
தொந்தரைபுரியும்பொல்லா துர்க்குணமிருகமெல்லாம்
அந்தகனூரிற்செல்ல அஸ்திரந்தன்னுற்கொன்று
சுந்தரவேட்டையாடி சுகமுடன்நகரிற்செல்வோம்.

வசனம்.

மந்திரி பிரதானியரே நாம் அரண்மனையைவிடுத்து ஆரண்யத்தில் வந்துசேர்ந்தோம் இனி வேட வில்லியர்களை நாற்புரமு மனுப்பி புலி, சிறுத்தை மான், கடம்பை முதலாகிய மிருகங்களைத் துரத்தும்படியாகச் சொல்வீர்.

(மந்திரி-வ-ம்) அரசே உமது சொற்படியே மிருகங்களை நாற்புரமும் துரத்தலாயினர்.

(ஆஜம்ஷா-வ-ம்) மெத்த சந்தோஷம்.

ஆஜம்ஷா தன் மந்திரி பிரதானியருடன் காட்டின்
மிருகங்களை நாற்புரமுந் துரத்தி
வேட்டையாடுவது.

—∞—

## ஆஜம்ஷா சொல்வது

தரு-இ-ம-இந்துஸ்தானி நோட்-ஆதிதாளம்.

வீரசூரதீரர்களோ வஞ்சமர்க்கஞ்சா சேனைகளே
வில்லிலேசரமேன் சொல்லுமுன்விடுத் தெல்லாமிருகமும்
கொல வீரே.

வசனம்.

மந்திரி பிரதானியரே இந்த க்ஷணமே அதிதீவிரமாய் நாற்புரத்திலும் சிதறியோடும் மிருகங்களை ஓடவொட்டாமற்றூரத்தி தனுசிற்றொடுத்த அஸ்திரங்களாற் சிதைத்துக் கொல்வீர்.

தரு.

அம்புவில்லுங் கைபிடித்து ஆயுதபடையுடனேசென்று
சிம்பமுயலினங் கும்பாயிறந்திட அம்புகளேவி
கொன் றிடு வீர்.

வசனம்.

அடா! வேட வில்லியரே இதோ பார்த்தீரா! வெண்மை நிறம் வாய்ந்த முயற்கூட்டங்களோடிது, இதோ நமக்கெதிரே ஓர் சிங்கம் ஓடிவருகின்றது. அதி தீவிரமாய் தீக்ஷண்யகணைகளையேவி அவைகளை ஓடவொட்டாமற் றடுத்துக் கொல்வீர்.

தரு.

ஆனைகரடி புலிகரியும் அழகுளமானினக் கூட்டமிதோ
கானக்குறவரே நாணியேற்றியே ஏனங்கடம்பையைக
கொன் றிடு வீர்.

வசனம்.

ஆ! ஹா! வேட வில்லியரே எனது கரத்திற்றாங்கி தனுசிற்றொடுத்த அஸ்திரங்களால் அநேக மிருகங்களை வதைத்தேன். இனி மீதியாகத் தப்பிப் பிழைத்திருக்கும் மிருகங்களையெல்லாம் நீங்கள் வதைத்துக் கொல்வீர்கள்.

(வேடர்-வ-ம்) மஹாபாக்கியம் அரசே.

(ஆஜம்ஷா-வ-ம்) மந்திரி எனக்கு நாவரக்ஷியதிகரித்தமையால் நந்தவனத்திற்சென்று நன்னீரருந்திக் களைதெளிவோம் வருவாய்.

(மந்திரி-வ-ம்) அரசே! அப்படியே செல்வோம்

சுந்தர் சொல்வது

தரு-இ-ம்-முகாரி-ரூபகதாளம்.

பல்லவி.

| | | |
|---|---|---|
| ஆ! தெய்வமே | யிதென்னகாலம் | |
| அமைந்ததோ | தெய்வமே | (ஆ) |

அநுபல்லவி

வையகந்தனில்யானும் பிறந்து துயர்மிகுந்து
வருத்தப்படச்செய்தாயோ தெய்வமே (ஆ)

சரணம்.

பாரோரிகழ்ந்திட பலநாளுந்துன்பத்தாற்
பரதவித்திடலானேன் தெய்வமே
சீரார்கருணைமேவும் ஜெகதீஸாயுன்னருளைச்
சிந்தித்தேன்கார்த்தருள் தெய்வமே (ஆ)

ஆஜம்ஷா தன்னுமந்திரியுடன் நந்தவனத்திற்றுவநகையில்
அங்ஙனம் பரிதாபமாய்பகவானைநினைந்து
துயரப்படும் சுந்தரியைப் பார்த்து
யாரேன விசாரித்தல்.

## ஆஜம்ஷா சொல்வது

விருத்தம்.

அன்பினுக்கிசைந்தமந்த்ரி அதோபாராயெதிரிற்றேன்றி
மின்னலைப்போற்ஜொலித்து மேதினியோர்கள்மெச்சும்
பன்னரும்பொன்னாற்செய்த பதுமைபோற்பிரகாசித்து
என்னமோபுதுமையாக இருக்குதுகவனிப்பாயே.

வசனம்.

மந்திரி அதோ பார்த்தனையா! நமக்கெதிரிற்றேன்றும் நந்தவனச் சோலையில் பசுந்தங்கத்தாற்செய்த பதுமையைப்போற் பிரகாசிக் கும் கன்னிகையானவள் அப்சரஸ்திரீயோ? தெய்வகன்னியோ? நாம் அருகிற்சென்று விசாரிப்போம் வருவாய்.

(மந்திரி-வ-ம்) அரசே! நீர் புகன்றவை யுண்மையே. நமது நக ரத்தி வித்தகைய அழகலங்கார தேஜஸமைந்த தெய்வகன்னிகை வந்திருப்பது எந்த தபோதனர்கள் கிருபையோ? உமது அதிர்ஷ் டானுகூலமோ? அறிகிலேன் மஹாப்ரபு.



சுந்தர். ஆஜம்ஷா மந்திரி

## ஆஜம்ஷா சொல்வது

தரு-இ-ம்-கலியாணி-ரூபகதாளம்.

பல்லவி.

திருவோபொற்பிரகாச உருவோ தேவர்கள்புகழ்
தெய்வரம்பையோ ரதியோ

அநுபல்லவி.

உருவாயெழுதுசித்ரம் உயிர்பெற்றிருப்பதுபோல்
உன்னதமாகவே இங்குநிற்பது
எனதுமனதை களிக்கச்செய்யுது (திரு)

சரணங்கள்.

சந்திரனைப்போன்று துலங்கும்மாதரசி
இந்திரலோகம்விடுத்து இன்றயித்தேசத்தி
லெனக்கென்றிங்குவந் திருக்கும்அழகியை
நினைக்கநினைக்கவென் மனமும்மகிழுதே (திரு)

வசனம்.

ஆ! ஹா! மந்திரி நாம் அரண்மனையை விடுத்து வருகையில் வழியிலெதிருற்ற நற்சகுனத்தின் நற்பலனால் இன்றையதினம் எத்தேசத்தின் உத்தமவேந்தரும் காண்பதற்கரிதாகிய கந்தர்வஸ்திரீயை கண்டு மனமகிழ்ந்தோம். அன்றியும். கந்தர்வஸ்திரீயென்றால் சிறகுகளிருக்கவேண்டு மன்றோ? தெய்வகன்னிகையென்றால இங்ஙனம் வந்திருப்பதற்குக் காரணம்யாதோ? இவ் வனதேவதையோ? அருகிற்சென்று விசாரிப்போம் வருவாய்.

(மந்திரி-வ-ம்) அரசே! எனக்குமவ்விதமே தோற்றுது.

ஆஜம்ஷா சொல்வது

விருத்தம்.

சுந்தரானந்தமாக ஜோதிபோற்பிரகாசித்து
இந்தநற்சோலைதன்னில இருககின்றமாதேநீயார்
கந்தர்வஸ்திரீயோதெய்வ கன்னியோவிபரமாக
உந்தநற்செய்தியெல்லாம் உண்மையாய்ப்புகலுவாயே.

வசனம்.

சுந்தரானந்தசொரூபமாக இங்ஙனம் வந்திருக்கும் மாதரசே! நீ யார்? கந்தர்வஸ்திரீயோ? தெய்வகன்னிகையோ? இவ் வனதேவதையோ? அன்றியும், நீ வசிப்பது எங்கே? யாது காரணமாக இங்ஙனம் வருகலாயினையோ? யான் கவனிததுணர்க என்முன் விபரமாய்ப் புகல்வாய்.

(சுந்தர்-வ-ம்) ஐயா! யான் கந்தர்வஸ்திரீயுமல்ல, தெய்வகன்னியுமல்ல, இவ் வனதேவதையுமல்ல யான் வசிப்பது காபல்தேசம் என்பெயர் சுந்தர். எனது தந்தையாகிய அப்துல்அசீஸ் என்னை எனது மணாளன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வருகையில் அவர்முன்னதாகச் சென்றுவிட்டனர். யான் வழிதெரியாமல் இங்ஙனம் அலைந்துத் திரியலானேன்.

(ஆஜம்ஷா-வ-ம்) ஆ! எனது ஆசைக் கிசைந்த சுந்தரவசனி நீ! யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். எனது அரண்மனையில் வந்து இராணிவகுத்தி லிருப்பாயாகில் அன்னவஸ்திரங் குறையிலலாமல் சுகஜீவியாயிருப்பாய். வருகின்றாயா?

(சுந்தர்-வ-ம்) நல்லது வருகின்றேன் அழைத்துச்செல்வீர் மஹா ராஜாராஜேஸ்வரா.

(ஆஜம்ஷா-வ-ம்) மந்திரி அரண்மனைக்குச் செல்வோம் சேனைகளனைவரையும் அழைத்துக்கொண்டுவருவாய்.

(மந்திரி-வ-ம்) மஹாபாக்கியம் அரசே.

ஆஜம்ஷா சுந்தரியை அழைத்துக்கொண்டு
தனது சேனைகளுடனேஅரண்மனையை
நாடி வருவது,

---

## இராஜபத்தினி சொல்வது.

### விருத்தம்.

எந்தன்பிராணேஸாபார்த்தோர் எவர்களும்புகழுந்திவ்ய
அந்தரமகளீர்போன்ற அழகமைந்திடுஞ்சிங்கார
தரமாதைதம்தசம் துய்யனேமனமகிழ்ந்து
எந்தனுக்குண்மையாக இன்பமாய்ப்புகலுவீரே.

### வசனம்.

பிராணநாதா! பொற்பிரகாசமாய்த்துலங்கும் இந்த மாதரசியை எங்கனமிருந்து அழைத்துவருகலாயினீர்.

(ஆஜம்ஷா-வ-ம) பெண்மணே யான் கானகத்தில்வேட்டையாடிய களைதெளியும் பொருட்டு தண்ணீருந்த தாமரைப் பொய்கையை நாடிச்செல்கையில் கந்தர்வஸ்திரீயைப்போல நந்தவனத்திலுலாவித் திரிவதைப் பார்த்து யானழைத்துக்கொண்டுவந்தேன்.

(இராஜபத்தினி-வ-ம்) அம்மணி நீ யார்? யாது காரணமாக நந்தவனத்தில் தனிமையாக வந்திருக்கலாயினையோ? யான் கவனித்துணர விபரமாய்ப் புகல்வாய்.

## சுந்தர் சொல்வது.

தரு-இ-ம்-பார்வதி தேசிகதோடி-ரூபகதாளம்.

### பல்லவி.

அம்மணி யெனதுதுயரை மொழிகுதுமினி
அன்புடனே கேட்பீரே (அம்மணி)

### அநுபல்லவி.

இம்மாநிலந்தனி விடுக்கணோர்ந்து
இணையிலாதுய ரடைந்திப்போது
உம்மகந்தனில் வந்தேனம்மணி
உண்மையிதுவென் றெண்ணுவீர் (அம்மணி)

### சரணங்கள்.

அன்னைதந்தைகுரு தெய்வமும்நீயன்றி
ஆதரிப்போரெனை யாரம்மா
நந்நயமிகும் நின்னருள்தனை
நம்பிவந்தேனே யானம்மா (அம்மணி)
வறுமையாற்களைத் திளைத்துசோர்ந்து
வந்தேனேயெந்தனைக் காரமமா
குறையிலாதருள் சுரந்திலகுமுன்
குழந்தைபோலவே பாரமமா (அம்மணி)

### வசனம்.

அம்மணி! எனது தந்தையும், யானும் ஆரண்யமார்க்கமாய்ச் செல்லுந் தருணம் அவர் முன்னதாகச் சென்றுவிட்டமையால் எனக்கு வழிதெரியாமல் கானகத்திற்றனே அலைந்து திரிந்து காய் கனிகளைப்புசித்து வனவாசியாய் வருகையில் இம் மஹானுபாவர் என்னை இங்ஙனம் அழைத்துக்கொண்டுவந்தனர். ஆயினும், யான் உமது சமூகத்தில்வந்து உமது திருவடியை நம்பினேன். எனது அன்னையினும்சிறந்த நற்குணம் வாய்ந்த உனது மைந்தரைப்போற் சந்ததமும் என்மீது கருணைவாய்ந்து அன்ன வஸ்திரங் குறையிலா மற்றந்து ஆதரித்திரக்ஷிப்பாயம்மணி.

(இராஜபத்தினி-வ-ம்) அம்மணி! நீ யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாம் எனது சகோதரியைப்போலஉனக்கு யாதொருகுறையு மணுகாமல் சுகஜீவியாயிருப்பாயம்மா.

(சுந்தர்-வ-ம்) மஹாபாக்கியமம்மா.

### பொது-விருத்தம்.

சுந்தரியைக்கலியாணஞ் செய்யவென்று
சுகுணமுளவேந்தன் மனையாட்குச்சொல்ல

அந்தணன்மொழிக்கிணங்கி ராஜபத்னி
அன்புடனேசுந்தரியை கேட்கும்போது
நிந்தையிலா விரதானுஷ்டானஞ்செய்து
நிருபனையான் மணம்புரிவேனென்றுரைத்து
தந்திரமாய்த்தப்பித்து ஓடிப்போக
தன்மனதிற்றனே யோசிக்கலானாள்.

வசனம்.

இவ்விதமாய் சுந்தர் இராஜபத்தினி வசத்திற் சுகஜீவியா யிருக்கையில் ஓர்நாள் ஆஜம்ஷாமஹாராஜன் தனது மனையாளை அருகிலழைத்து, பெண்மணே! யானிந்த சுந்தரியை கலியாணஞ்செய்துக் கொள்வதற்குக் காதலாகினேன். ஆயினும், நீ எவ்விதமாயினும் தந்திரமாய் நன்முயற்சி செய்யவேண்டுமெனக. இராஜபத்தினியும் அவ்வாறே நன்கெனச்சம்மதித்து சுந்தரியை விசாரிக்க அந்தப் பதிவிரதாசிரோன்மணி ஆச்சரியததுடன் திடுக்கிட்டு, இஃதென்ன தர்மசங்கடமென சற்றுயோசித்து இனி இவர்கள் கருத்திற் கிசைந்தாற்போற் சம்மதித்து தந்திரமாய்த் தப்பித்துக்கொண்டு ஓடிப்போவதே சிலாக்கியமென மனந்துணிந்து, இராஜபத்தினியைப் பார்த்து அம்மணி உமது மனம்போல் யானுஞ் சம்மதித்தேன். இத்தருணம் யான் ஓர் விரதம் அனுஷ்டிக்கலாயினேன் அவ்விரதம் முடிந்தபிறகு விவாகஞ் செய்துக்கொள்ளுகிறேனென புகன்றதை யுணர்ந்த இராஜபத்தினி அரசனுக்கு மொழிதலும் இனி நடக்கும் விதங்காண்க.

## ஆஜம்ஷா சொல்வது

விருத்தம்.

அன்பினுக்கிசைந்தயெந்தன் ஆவிக்குமுயர்ந்தசுந்தர்
இன்பமாயுனக்கிசைந்த இனிமையாமவிரதத்திற்கு
என்னென்னவேண்டுமோநீ இக்ஷணம்புகல்வாயாகில்
அன்புடன்சித்தஞ்செய்ய ஆக்ஞாபித்தருள்வேன்யானே.

வசனம்.

அவனியோர்புகழும் எனது ஆசைக்கிசைந்த் சுந்தர்! நீ அனுஷ்டிக்கும் விரதத்திற்கு வேண்டியவை யனைத்தும் யான் குறையாமற்

கொடுக்கும்படியாக ஆக்ஞாபித்திருக்கின்றேன். ஆயினும், நீ அனுஷ்டிக்கும் விரதம் எத்தனை மாதத்தில் முடிவுபெறும் புகல்வாய் மாதரசே.

(சுந்தர்-வ-ம்) அரசே! யான் அனுஷ்டிக்கும் விரதம் மூன்று மாதத்தில் முடிவுபெறும் ஆயினும், நம்து நந்தவனத்தில் ஓர் மாளிகை ஏற்படுத்தித் தருவீராகில் மெத்த நலமாயிருக்கும்.

(ஆஜம்ஷா-வ-ம்) மந்திரி நமது நகரில் வசிக்கும் சிற்பசாஸ்திரிகளால் நந்தவனத்தில் ஓர் மாளிகை கட்டுவித்து எனது ஆசை நேச விஸ்வாச சுந்தர் அனுஷ்டிக்கும் விரதத்திற்கு வேண்டியவையாவும் நாள்தோறும் குறையாமல் தருவாய்.

(மந்திரி-வ-ம்) அவ்விதமே மஹாபாக்கியம் இராஜ ராஜாக்கள் பூஜிதம்பெறும் ராஜேஸ்வரா.

சுந்தர் மாளிகையிற் றனியாயிருந்து
விரதானுஷ்டானஞ்செய்யுந்
தருணம் பகவத்தியானஞ்
செய்வது.

---

## சுந்தர் சொல்வது

தரு-இ-ம்-அசாவேரி-அடதாளம்.
கண்ணிகள்

எந்தன்விதிதனக் கேதுசெய்குவேன்
எவ்விதமினி யுய்குவேன்
முந்தியூழ்வினை வசமோயிவ்விதம்
மூண்டதிங்ஙனம் தெய்வமே

கப்பலேறியே செல்கையில்மழை
காற்றும்வீசிய வேகத்தால்
கப்பலுடைந்துக் கடலில்வீழ்ந்திட
காபிரிதேசந் தனில்வந்து

ஐயமேற்றுண்க நகரிற்செல்கையில்
ஆதிதேவன்போற் படேரென்பான்
மெய்யனும்ரவ்வ டனருகினில்
மேன்மைபா யழைத்துச்சென்று

திருமணஞ்செய்து பெருமையாகவே
சிந்தைமகிழ்ந்துயான் வாழ்கையில்
வரும்விதியினு லிவ்விதமாக
வாய்ந்துதேயாது செய்குவேன்.

வசனம்.

ஆ! ஜெகதீஸா! இஃதென்ன விபரீதகாலம். படேரென்பவன் அற்பமதியினுல் என்னிடம்வந்து பாஷித்த வார்த்தையைக்கவனித்த என்து மணளன் அவன் நாசியை அறுத்துத்துரத்தவும், யான் பரிதாபமாய் இவ்வித அநியாயஞ் செய்யலாமோவென கையைவீசவும் விரல்நகம் அவர்கண்ணிற்பட்டு குருடனுகியதாற் கோபித்து என் தந்தைக்குகிருபமெழுகவும் அவர்யாதேனும் ஆலோசித்துணராமல் என்னைக் கொன்றுவிடும்படியாக என் தமயனை அனுப்பவும் அவர் என்னைக் கொல்ல மனமின்றி ஆரண்யத்தில் விடுத்துச் செல்லவும் யான் ஆற்றுெரு துயரடைந்து ஆரண்யவாசியா யலேந்து, கானக மார்க்கமாய் வருங்கையில் இந்த நகரத்தரசன் அழைத்துக்கொண்டு வந்து மறுமணஞ் செய்துகொள்வதற் கிசைந்ததும் ஆச்சரிய மன்றோ?

சுந்தர் மாளிகையை விடுத்துந் தனிமையாக
வந்து தனது காலவித்தியாசத்தைநினைந்து
விசனப்படுகையில்
மந்திரிவருவது.

---

மந்திரி சொல்வது.

விருத்தம்.

அன்னமேமயிலேமானே அமிர்தக் கிளியைப்போன்று
மின்னல்போற்பிரகாசிக்கும் மெல்லியேயெந்தனேடு
அன்புடன்வருவாயாகில அநேகதேசத்திற்சென்று
இன்புடன்வாழ்ந்திருப்பாம் இக்கணம்வருகுவாயே.

வசனம்.

பெண்ணே! இந்த நகரத்தரசனை மணம்புரிவாயாகில் இன்னும் பற்பல துயரடைவாய். அஃதேனெனின் அவன் மனையாளாகிய இராஜபத்தினி மிகவும் குரூரகுணமமைந்தவள். ஆகையால் அவர்களிடம் அகப்பட்டுத் துயரப்படுவதிலும் என்னுடன்வருவாயாகில் நாம் அநேக தேசங்களிற் சென்று மனோல்லாசமாய் வாழ்ந்திருப்போம் மாதரசே.

சுந்தர் சொல்வது

தரு-இ-ம்-பார்ஸீ நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சீ! சீ! யென்முன் நில்லாதே
சித்ரவதைசெய்குவேனடா

அநுபல்லவி.

பேச்சறிந்த நெஞ்சனே
பேய்மன வஞ்சகனே
தூர நில் லடா (சீ! சீ!)

சரணங்கள்.

பாபவார்த்தை பகருவதால்
பாரிற்றுய ரடைகுவாய்
தூர நில் லடா (சீ! சீ!)

இராஜன்பார்த்தா லுந்தனை
எமலோக மேகச்செய்வான்
தூர நில் லடா (சீ! சீ!)

வசனம்.

அடடா! துரோகி! என்னவார்த்தைப் புகல்வதாயினை துஷ்டா! மாநிலம் புரக்கும் மஹாராஜர்கட்கு மதிபுகட்டும் மந்திரியாகிய உனக்குக் கொஞ்சமேனும் அறிவில்லையா? துர்க்குணம் வாய்ந்த மதியீனனே! "பரஸ்திரீகமனம் பரலோகநாசனம்" என்ப துணர்கிலாயோ? பேயனே! அன்றியும், உனது அதிர்ஷ்டானுகூலத்

திறற்கிடைத்து, மாநிலத்தோர் புகழுறும் மந்திரிஉத்தியோகத்தை அற்பமதியாலிழந்து, அவனியோரிகழுந் தன்மையாய்க் கெட்டுப் போவதுநன்கல்ல. இத்தருணமே! உன்னிருப்பிடத்திற்குப்போகா விடில் ஆக்கினையால் ஆவியிழந்து அவனியின் ஆசையை விடுத்து அந்தகன்பதி யணுகுவாய் கல்வியுணரா கசடனே.

(மந்திரி-வ-ம்) ஆ! ஹா! எனது அன்புக்கிசைந்த சுந்தர்! குயி லினம் பாஷிக்குந் தன்மையாக மதுரவசனங்களால் நீ புகன்றவை யனைத்துங் கவனித்துணர்ந்த என்மனம் மிகவும் வியாகூலமெய்தி யது ஆயினும், நீ இவ்விதமாய் மனம்வெறுத்து முனிந்துரைப்பது நன்கல்ல. இத்தருணமே நாம் அந்நியதேசஞ்சென்று மனோல்லாச மாய் வாழ்ந்திருப்போம் வருவாய் அவனியோர்புகழும் அழகானந்த மாதரசே.

மந்திரியானவன் சுந்தரியை மறுதேசத்திற்கு
அழைத்துக்கொண்டு போவதற்கு
தந்திரமாய்ப்பேசிக்கொண்
டிருக்கையில், இராஜ
குமாரன்வருவது.

### இராஜகுமாரன் சொல்வது

தரு-இ-ம்-பார்ஸீநோட்-அடதாளம்.

கண்ணி.

அடடா! பெண்சிற் றன்னையை
அழைப்பதுனக்கு தர்ம்மமா
கொடும்பேன்கன்னந் தன்னிலுதை
கொஞ்சமுமதியிலா வஞ்சகனே

வசனம்.

அடடா! துரோகி! நீ கிஞ்சிற்றேனும் ஆலோசித் துணராமல் அரசன்தேவி அன்னைக்குச் சமானமென்ப துணராமல் அற்பமதி யா லிவ்விதம் பாஷிப்ப துனக்குத் தர்ம்மமா? எனது தந்தை கவ

ஙிப்பாராகில் உன்து சிரசைவெட்டி எழுலோகத்திற்கு அனுப்புவ துண்மை யென்றறிவாய் துர்க்குணம்வாய்ந்து தொல்லுலகோ ரிக ழுந்தன்மையான பேயனே:

(மந்திரி-வ-ம்) அடடா! இனி இந்தச் சிறுவன் உயிருடனிருந் தால் வெகுவித கலகஞ்செய்வான் ஆகையால் இவனை இக்ஷணமே கொன்றுவிட்டு சுந்தரியை அழைத்துக்கொண்டு போவதே நலமா யிருக்கும்.

(இராஜகுமாரன்-வ-ம்) அடடா! துஷ்டா! என்ன வார்த்தைச் சொன்னாய்? மதியின்றிய பேயனே! என்னைக் கொல்வதற்கு உன் னாலாகுமோ? இத்தருணமே நமது சமர்த்தைக் கவனிக்கவேண்டு மாயின் நாம் இருவரும் யுத்தம்செய்வோம் வருவாயடா அற்ப னாகிய மதியீனனே.

இராஜகுமாரனும், மந்திரியும்
யுத்தஞ் செய்வது.

---

## மந்திரி சொல்வது.

தரு-இ-ம்-பார்ஸீ தேசிகதோடி-ஆதிதாளம்.

யுத்தஞ்செய்யவும் உன்னாலாகுமோ
இத்தருணமுன் ஆவிபோக்குவேன்

## இராஜகுமாரன் சொல்வது.

தரு-இ-ம்-பார்ஸீ காபி-ஆதிதாளம்.

பேச்சரிந்தநாய்குலேக்கா பேயாநீயறிவாயே
ஆச்சரியமாய்ப்புகன்றால் அஞ்சுவேனோமூர்க்கனே

மந்திரி தரு.

பாலனென்றல்லோ பார்த்தேனிதுவரை
காலனூர்க்குனே கடுகியோட்டுவேன்

இராஜகுமாரன் தரு.

வதைக்கவுன்னாலாகுமோடா வஞ்சகநிர்மூடனே
உதைத்துந்தன்வாயைக்கிழித்து ஓட்ச்செய்வேனினமே

வசனம்.

அடடா! துஷ்டா! சிங்ககுட்டி நரிக்குப் பயப்படுமோ? வீரப்ர தாபனாகிய என்னை வெலவதற்கு உன்னாலாகுமென் றெண்ண வேண்டாம் பேயனே.

(மந்திரி-வ-ம்) சரி! இவனை இன்னமுங் கொல்லாம விருப்பது நன்கல்ல இனி எவ்வித மாயினும இவனைக் கொன்றுவிட்டு சுந்தரி யை அழைதது்க்கொண்டு போவோம். இது தான் தகுந்த ஆலோச னையாகும்.

பொது வசனம்.

கேளுங்களையா சபையோர்களே! இவ்விதமாய் மந்திரியாகிய வஞ்சகனை துர்க்குணத்தைத் துணையாய் வகித்து இராஜகுமாரனைக் கொன்று "புலியானது பசுவைத்தூக்கிக்கொண்டு போவதுபோல எடுத்துச்சென்று ஆரண்யத்திற் புதைத்துவிட்டுவருகையில் இந்த அநியாயத்தைப் பார்த்துமனந்தாளாத சுந்தர் ஆ! இஃதென்ன ஆச் சரியமென்று மனமிரண்டு மரணமூர்சசையாய் வீழ்ந்துவிட்டதை கவனித்த மந்திரியானவன் சுந்தரி இறந்துவிட்டாளென மதித்து இனி இங்ஙன மிருந்தால் ஆபத்தெய்து மென மனமிரண்டு, அரண் மனைக்குப் போய்விட்டான். அப்பால், ரவ்வடனால் நாசியிழந்த பரோரென்பவன் நகரிற் செல்வதற்கு மனமின்றியவனாய் கானகத்திற் றானே காய்கனிகளைப் புசித்துக்கொண்டு ஆரண்யவாசியாய்த் திரிந் துக்கொண்டிருக்கையில் வழியிலெதிருற்ற நந்தவனத்தில் மரண மூர்ச்சையாய் வீழ்ந்திருக்கும் சுந்தரியைக்கண்டு மனந்தாளாமல் அந்த வனத்தில் வசித்திருக்கும் ஓர் சந்நியாசியை அழைத்துக் கொண்டுவருகிற விதங்காண்க.

பரோர் வசனம்.

ஐயா அஞ்ஞானத்தை யகற்றி மெஞ்ஞானசொரூபராய்க் காசினி யை விடுத்து கானகத்தில்வந்து கர்த்தனைப்பணிந்து அருந்தபம்புரி யும் மாதவமுனிவரே இந்த ஆரண்யத்தில் ஓர் கன்னிகை இறந்து பிரேதமா யிருப்பதால் யான் கண்டு மனந்தாளாமல் உம்மிடம்புகல வதாயினேன். ஆகையால், உமது கிருபையினால் உயிர்பெற் றெழுந் திருக்கச் செய்வீராகில் உமக்கு தர்மமாகும் தரணியோர் புகழும் தபசிரேஷ்டரே.

(சந்நியாசி-வ-ம்) அப்பா! இந்தப் பெண் ஓர்வித மனவியாகூலத்தினால் மரணமூர்ச்சையா யிருக்கின்றாள். ஆயினும், இந்த தண்ணீரைத் தெளித்து எழுந்திருக்கச்செய்வாய்.

(படூர்-வ-ம்) அப்படியே மஹாபாக்கியம் தபசிரேஷ்டரே.

படூர் ஜலத்தைத் தெளித்தவுடனே சுந்தர் எழுந்திருந்து மனமிரண்டு கானகமார்க்கமாய் ஓடுவது.

---

(படூர்-வ-ம்) பெண்ணே! அந்நாளில் நீங்கள் கடற்கரையில் மனசஞ்சலத்துட னிருக்கையில் உம்மை தனவந்தனுகிய ரவ்வடன் முன்பாக அழைத்துக்கொண்டுவந்து நல்லபதவியிலிருக்கச் செய்தேன் இந்நாளில் நீ மரணமெய்த உன்னை எழுந்திருக்கச்செய்தேன் இந்த விஸ்வாசத்தை மறவாமல் இனியாகிலும் என்னுடன் வாழ்ந்திருப்பாய் மாதரசே!

(சுந்தர்-வ-ம்) அடடா! இஃதென்ன விபரீதம். இனி அரைக்ஷணமாயினும் இங்ஙனம் நிற்காமல் கானகமார்க்கமாய்ச்சென்று மிருகங்களின் வாய்க் கிரையாவது மிகவும் நலமாயிருக்கும்.

---

## வீரப்ரதாபன் சொல்வது.

### விருத்தம்.

கானகந்தன்னிற்செல்வோர் கண்டதிசயிக்கக்காட்டின்
மானைப்போலோடுகின்ற மாதேநீயாரோகாணேன்
வானத்தின்மாதோயன்றி வனத்தில்வாழ்கன்னிதானோ
நானுணர்ந்திடவன்பாக நலமுடன்மொழிகுவாயே.

### வசனம்.

கானகத்தில் வாழும் மானைப்போல அதிவேகமாய் ஓடுகின்ற மாதே நீ யார்? நீ வசிப்பது எந்நகர்? இந்த பயங்கரமான ஆரண்யத்தில் மனமிரண்டு நீ தனிமையாய்ஓடுவதேன்? நீ வனத்தில்வசிக்கும் தெய்வகன்னியோ? ககனத்தில் வாழும் கந்தர்வஸ்திரீயோ? யான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வாய்.

### சுந்தர் சொல்வது

#### விருத்தம்.

ஐயனேயென்னசெய்வேன் அந்தகன்போன்றபாவி
துய்யனேதுரத்துகின்றான் துயர்மிகுந்தோடிவந்தேன்
மெய்யெலாம்சோர்ந்திளைத்து மேனியுந்துடிக்குதையா
கையினாலிவனையோட்டி காப்பாற்றுமென்னைத்தானே.

#### வசனம்.

ஐயா யான் வனதேவதையுமல்ல தெய்வகன்னியுமல்ல கந்தர்வ ஸ்திரீயுமல்ல காபல்தேசத்தின் வர்த்தகனாகிய அப்துல்அசீஸ் அருந் தவப் புத்திரியென்னும் சுந்தரியாகிய யான் காலவித்தியாசத்தினால் கானகமார்க்கமாய் வருகையில் எமனைப்போன்ற இந்தப் பாவி என் னைத் துரத்திக்கொண்டு வருகின்றமையால் யான் மனமிரண்டு ஓடி வருகலாயினேன். ஆகையால், இத்தருணமென்னைக் காப்பாற்றி இர க்ஷிப்பீர் மஹாப்ரபு.

(வீரப்ரதாபன்-வ-ம்) பெண்ணே! இனி நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். அடடா! துஷ்டா! அருகில் வருவாயாகில் இந் தக் கத்தியினாலுன்னை வெட்டிப்போடுவேனடா.

(படேர்-வ-ம்) அடடா! இஃதென்னஆச்சர்யம் இந்தப்பெண்ணால் நாம் நாசி இழந்ததுமன்றி இத்தருணம் இந்தக் குரூரன் கைவ்ாளி னால் சிரசுபோய்விடும். ஆகையால் இனி நாம் தப்பித்துக்கொண்டு போவதே நலமாயிருக்கும.

படேர்போய்விட்டபிறகு வீரப்பிரதாபன் சுந்தரியை
தனது இருப்பிடத்திற்கு அழைத்துச்சென்று
விவாகஞ்செய்துக்கொள்வதற்கு
ஆலோசித்தல்.

### வீரப்ரதாபன் சொல்வது

#### விருத்தம்.

அன்பானசுந்தரிந்த அவனியோர்மனங்களித்து
நன்மையாய்வாழ்த்தயாமும் நலமுடன்மணம்புரிந்து

இன்பமாய்வாழ்வோமென்று எண்ணினேனுண்மையாக
கன்னியுன்மனதிலுற்ற கருத்தையும்புகலுவாயே.

வசனம்.

எனது அன்புக்கிசைந்த சுந்தர்! உலகோர் மனமகிழ்ந்து ஆசீர்வதிக்க நாமிருவரும் திருமணம்புரிந்து பெருமையுடன் வாழ்ந்திருப்போமென ஆலோசித்திருக்கின்றேன். ஆயினும், உனது மனதின் கருத்தையும் எனக்கு விபரமாய்ப் புகல்வாய் எனது ஆசை நேச விஸ்வாசமிகுந்த மாதரசே.

(சுந்தர்-வ.ம்) மஹாப்ரபு! உமது வாக்கியத்தை யான் மறுக்க வசமோ? ஆயினும், இன்னும் பத்துநாட் சென்றபிறகு, உமது மனதின்படி தரணியோர் மனமகிழ திருமணம்புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்போம்.

(வீரப்பிரதாபன்-வ-ம்) சரி அப்படியே மஹாசந்தோஷம். என் ஆசைக்கிசைந்த சுந்தர்.

சுந்தர் வீரப்ரதாபனுலமைத்த மாளிகையில்
தனியாயிருந்து தனக்குற்ற ஆபத்தை
நினைந்து விசனப்படுவது.

## சுந்தர் சொல்வது

தரு-இ-ம்-பார்ஸீ ஏகதாளம்.

கண்ணிகள்.

அல்லாயிதென்ன விந்தையோ
அறிகிலேன் யானே
ஐயோயென் விதியை
யாரிடத்தில் புகலுவேன்

கப்பலேறியாம் செல்கையில்
காற்றும் மழையினுல்
கடலில் வீழ்ந்திட
கரையில் வந்தபின்

தந்தைதமைய னுடனேயான்
தயங்கி கிறகையில்
வந்தபடே ரழைத்துச்சென்று
ரவ்வடீன்முன் கொண்டுபோய்

ஆசையாய் விவாகஞ்செய்ய
அந்த நாளையில்
மோசமெண்ணத்தி ஹற்படேர்
நாசி யறுபட

விதிவசத்தி லெந்தன்
விரல் நகத்தினால்
பதியந்தக னாகவும்
பாரோர் பழித்திட

தந்தைசொல்லா லென்தமையன்
வனத்தில விடுத்தேக
தருணம்கார்த்த ஆஜம்ஷா
தனயன் சாகவே

இன்ன மென்னென்ன
ஆபத்துக ளிங்குதோன்றுமோ
இதரணி தனிலெவ்விதம்
ஜீவிப்பேன் யானே

வசனம்.

ஆ! ஜெகதீஸா யானிந்த உலகிற் பிறந்து அனுபவித்த கஷ்ட நிஷ்டூரங்களைக் கவனித்திடில் ஆசசரியமா யிருக்கின்றதே. எனது அன்னை இறந்தமையால எனது தந்தை தமயனுடனே அந்நியதேசத்தையனுக ஆழிசஞ்சாரியாய்ச் செல்லுந்தருணம் காற்று மழையினால் கப்பலுடைந்து கடலில் வீழ்ந்திட யாங்கள் ஆதரவற்ற பரதேசிகளைப்போல விசனப்படுங்கருணம் படேரென்பவன்அழைத்துச் சென்று ரவ்வடீனென்பவருக்கு விவாகஞ்செய்துவைக்கவும பிறகு அநேகவித ஆபத்துகளெய்தி படோ நாசியிழக்கவும், ரவ்வடீன் கண்ணிழககவும ஆஜம்ஷாராஜகுமாரன் ஆவிய்ழந்து அந்தகனா ரனுக வுமாச்சுதே இன்னும் யான ஆவியோடிருந்த.ல் அநேகருக்கு ஆபத்தெய்தும ஆகையால் நாம் இறப்பதுநலமாகும.

சுந்தர் கற்பாரையையெடுத்து தலையி
லடித்துக்கொள்ளுந் தருணம்
இரண்டு ரிஷிகள்வந்து
க்கையைப்பிடித்துக்
கொள்வது.

---

## சுந்தர் சொல்வது

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

ஐயாயென்தன்கைவிடுவீர்—இந்த
அவனியில்யான் துயரடைந்ததுபோதும் (ஐயா)

அநுபல்லவி.

தெய்வமுமிவ்விதஞ் சோதனைபுரிந்திடில்
எவ்விதந்தரணியி லிருப்பதுயானும் (ஐயா)

சரணங்கள்.

வையகந்தன்னில்யான் வாழ்ந்ததுபோதும்
வறுமையாற்களைத்திளைத் தலைந்ததுபோதும்
பொய்யிலாதுன்ப மடைந்ததுபோதும்
பூவையென்றாற்சிலர் கெட்டதுபோதும் (ஐயா)

சனியின்கொடுமை சாராதுய்வேன்
சஞ்சலமின்றே சார்பாய்கொய்வேன்
இனியானல்லா இணையடிசேர்வேன்
ஈரகுலுல்லாவை இன்பாய்தொழுவேன் (ஐயா)

வசனம்.

ஐயா! அருந்தப முனிவரே! யான் பூமியிற் பிறந்து அநேக வித விதமாகிய ஆபத்திற்சிக்கி துயரத்தாற் றிகைத்து விசனமடைந்து எனது ஆவி யாக்கையை விடுத்து அந்தகன்பதி யணுகுவதற்குச் சித்தமா யிருந்தாலும் என்னாலே அநேகருக்குத் துன்பமெய்தி நாசி யிழந்தவரும், கண்ணிழந்தவரும், உயிரிழந்தவருமாய்த் துயரப்படு வதால் இன்னும் யான் உயிருடனிருந்தால் அவனியோ ரனைவருக்

கும் வெகுவித ஆபத்தெய்தும். ஆகையால், யான் இறந்துவிடுவே ஞகில் தரணியோரனைவருக்கும் ஒரு துயரமுமணுகாமல் சுகஜீவி யாய் வாழ்ந்திருப்பார் சுவாமி.

ரிஷிகள் சொல்வது

கோச்சகம்.

அஞ்சாதேயம்மா ஐயன்கிருபையினால்
மிஞ்சும்புகழோங்கி மேதினியில்வாழ்ந்திருப்பாய்
கொஞ்சந்துயரால் குவலயத்திலிவ்விதமாய்
அஞ்சியுயிர்விடுவோர் அலகையாய்த்தானலைவார்.

வசனம்.

அம்மா! நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். அவனியிற் பிறந்த மனிதர்கள் முன்ஜனனத்திற்செய்த கர்மானுசாரத்தினால் வாய்ந்த சரீரத்தைச்சுமந்துதிரிவதன்றி ஒருவராலொருவர் சுகதுக்க மனுபவிப்பரென்பது நம்பத்தக்க தன்று. ஆகையால், தரணியில் வசிப்போர் எத்தகையோராயினும் தாம்தாமே செய்தவினை தாமே யனுபவிப்பரென்பது உண்மையாகும். அன்றியும், உன்னால்அநேகர் நாசியிழந்தார் கண்ணிழந்தார் உயிரிழந்தாரெனப் புகல்வது சரியல்ல ஆவதும், அழிவதும் ஆண்டவன் செயலன்றி மனச்செயலென்று மதித்து, அநியாயமாய் உனது உயிரைப் போக்கிக்கொள்வாயாகில் ஆயுள்வரையினும் பேயா யலைந்து துயரப்படுவாய். ஆகையால், நீ! இன்றுமுதல் ஆண்பிள்ளைவேஷமாயிருக்கும்படியாக வரந்தந்தோம் நீ மனதைரியம்விடாமல் அநேக தேசங்களிலும் சென்று வியாதி யஸ்தர்களின்மீது இந்த விபூதியைத் தூவினால் சரீரசுகம் வாய்ந்து உனக்குக் கொடுக்கும் தக்ஷிணையாகிய பொருளைச் சிலவழித்து, அறுசுவைப்பதார்த்தத்துடன் திவ்வியான்னம் புசித்து ஜீவித்திருப் பாயாகில் சிலகாலஞ் சென்றபிறகு உனது அதிர்ஷ்டானுகூலத்தி னால் காஸ்மீகர்தேசத்திற்சென்று சுகஜீவியாயிருக்குங் காலத்தில் ஸ்திரீரூபமா யிருப்பதற்கு நினைப்பாயாகில் உனது மனதின்படியே விளங்கும். இனி யாங்கள் போய்வருகிறோ மம்மா.

(சுந்தர்-வ-ம்) அப்படியே மஹாபாக்கியம். போய்வருவீர் அருந் தபமுனிவரே.

ரிஷீஸ்வரரிடம் வரம்பெற்ற சுந்தர் காஸ்மீகர்
தேசத்திற்கு வருகையில் அந்நகரத்தின்
இராஜகுமாரத்திவியாதியாயிருப்பதை
தோழிகள் அரசனுக்குச்
சொல்வது.

---

## தோழிகள் சொல்வது

### விருத்தம்.

வையகந்தன்னையாளும் மன்னனேநின்சுபுத்ரி
மெய்யெலாஞ்சோர்ந்திளைத்து மேனியிலழகுகுன்றி
துய்யனேவியாதியாலே துயருற்று அன்னமின்றி
ஐயனேதிகைப்பதாளுள் அன்புடன்கவனிப்பீரே.

### வசனம்.

அரசே! உமது அருந்தவப்புத்திரி நாளுக்குநாள் தேகமிளைத்து சோர்ந்து வியாதியினாலே மெலிந்து, அன்னம் புசியாமலும் துயரப் படுகின்றனள் மஹாப்ரபு.

(இராஜன்-வ-ம்) ஆ! எனது அருந்தவப் புத்ரி! உனதுதேகமா னது எவ்விதமா யிருக்கின்றதோ? எனக்கு விபரமாய்ச் சொல்வா யம்மா.

## இராஜகுமாரத்தி சொல்வது

### தரு-இ-ம்-பார்ஸீ-ஆதிதாளம்.

### கண்ணிகள்.

காலகைகளும் வீக்கத்தினால்
கடுமையாய் வலிக்குதையா

வேல்பொருதுங் கண்சுழன்று
மேனியுந்தான் சுற்றுதையா

பித்தஜுரத் தாலெனது
பிராணனுந் துடிக்குதையா

சித்தமுந் திடுக்கிடவே
ஜீவனுங் கலங்குதையா

தலைவலியின் துன்பத்தாலே
சஞ்சலமாய்க் காணுதையா

பலநாளும் வியாதியினால்
பாரிறமுய ரடையலானேன்
துடிதுடித்துத் துயரடைந்து
திரேகநோயாற் ருன்றிகைத்து
பிடியன்னமுஞ் ஜீரணியாமல்
பேதியாகு தென்னசெய்வேன்
பூமியின் ஆசையொழிந்து
ஏமனூர்க் கேகுங்காலமோ

வசனம்.

தங்கையே! நாள்தோறும் எனது திரேக சவுக்கியமின்றி பித்த மதிகரித்து வாய் கசப்பாய் அன்னபதார்த்தம் புசிப்பதற் கியலாமல் நாவரட்சி யதிகரித்து தலைவலி பொறுக்கமுடியாமல் கண்சுழன்று, கைகால்களின் வீக்கத்தினால் எழுந்திருக்கச் சக்தியில்லாமல் ஆவி எமலோகஞ் செல்வதற்கு இன்றைக்கோ? நாளைக்கோ? இன்னுஞ் சற்று நேரமோ? வென, மனந்திகைத்து வழிபார்த்துக்கொண்டிருக் கின்றேன்.

## இராஜன் சொல்வது

தரு-இ-ம்-பார்ஸீ ரூபகதாளம்.

கண்ணிகள்.

மந்திரியென் செய்குவேன் மனமும்வாடுதே
ஈதென்விதிவசமெவர்க் கெடுத்துரைப்பனோ
பாலனின்றியே பகவான்கிருபையால்
சீலமாய்த்தபம்புரிந்து ஈன்றபுதரியும்
வாலவயதினில் மரணமடைந்து
காலனூரணுகிடவுங் காலமாச்சுதோ.
என்னென்றுசொல்லுவேன் எவ்விதமுய்குவேன்
அந்தகாலமோயிது அலலாயென்செய்குவேன்

வசனம்.

ஆ! மந்திரி! இந்த அநியாயத்திற்கு யானென்ன செய்குவேன் காசினியோர் புகழ்ந்துரைப்பச் சிறப்பெய்திய காஸ்மீர்தேசத்தைப்

பரிபாலனஞ்செய்யும் யான் புத்திரனின்றிய மனவருத்தத்தால் சித்தமெலிந்து கர்த்தனைப்பணிந்து அருந்தவம்புரிந்து தெய்வாதீன மாய் ஓர் புத்திரியைப்பெற்று மிகவும் மேன்மையாய்வளர்த்து, எந்தீ தேசத்து இராஜகுமாரனுக்காகிலும் திருமணஞ்செய்து இந்தநகரத் தையும் எனது மருமகனை அரசுரிமைபுரியும்படியாக மகுடாபிஷே கஞ்செய்துவைப்போமென ஆசையாயிருக்கையில் எனது அருந் தவப்புத்திரி நாளுக்குநாள் வியாதியால் அன்னாகாரம் புசியாமல் திரேகமிளைத்து மரணமெய்தி ஆவியிழந்து அந்தகன் பதியணுகுங் காலம் இன்றைக்கோ? நாளைக்கோ? இன்றுஞ் சற்றுநேரமோ? வென, ஆற்றொணா ஆபத்தாயிருக்கின்றதே இந்த அநியாயத்திற்கு யாதுசெய்குவேன்,

## மந்திரி சொல்வது

### விருத்தம்.

மன்னனேபயப்படாதீர் மாநிலத்தோர்கட்கெல்லாம்
பன்னருஞ்சுகதுக்கங்கள் வாய்ப்பதும்தெய்வாதீனம்
வன்மைவாகடத்திற்றேர்ந்த வைத்தியர்தமையழைத்து
நன்மைசேர்மருந்தினாலே நலம்பெறச்செய்குவோமே.

### வசனம்.

அரசே! நீர் சகல சாஸ்திர புராணமுங் கற்றுணர்ந்தவராயிருந் தும் தற்சமயத்திற்குற்றஆபத்தைநினைந்துவிசனப்படுவது நன்கல்ல ஆவதும் அழிவதும ஆண்டவன் செயலன்றி நம்மாலாகுமோ? மா நிலத்தில் மனிதராய் ஜனித்தால் எந்தெந்த காலத்தில் எப்பேர்ப் பட்ட சுக துக்கங்களை அநுபவிக்கவேண்டுமோ அவையனைத்து மனுபவிப்பதல்லாமல் உமது புத்திரி திரேக சவுக்கியமின்றி அன் னாகாரம் புசியாமல் வியாதியின் துன்பத்தால் மரணமெய்தி எமன் பதிக்குச்சென்றால் என்னசெய்வமென மனமிரண்டு துயரப்படுதல் நன்கல்ல. இத்தருணமே சகல விதவிதமாகிய வியாதிகளையுந்தீர்த்து வையகத்தோர்களைக் காப்பாற்றும் திடச்சித்தராகிய வைத்தியர்களை அழைத்துக்கொண்டு வருவோமாகில் வியாதிக்குத தகுந்த மருந்து களைத் தந்து திரேகத்தைக் காப்பாற்றி இரக்ஷிப்பார்.

(இராஜன்-வ-ம்) மந்திரி! உன்சொற்படியே யானுஞ் சம்மதித்தே னாகையால் இத்தருணமே நமது தேசத்திலிருக்கும் வைத்தியர்க ளனைவரையும் வரவழைப்பாய்.

(மந்திரி-வ-ம்) அப்படியே மஹா பாக்கியம் இராஜேஸ்வரா!

மந்திரியால் வரவழைத்த வைத்தியர்
இராஜனுக்குச் சொல்வது.

## வைத்தியர் சொல்வது

விருத்தம்.

இங்கிலந்தன்னையாளும் இறைவனேபோற்றிபோற்றி
நங்நயகருணைவாய்ந்த நராதிபாபோற்றிபோற்றி
இன்பமாயெமையழைத்த இனிமையாங்காரணத்தை
அன்புடன்புகல்வீரையா அரசனேபோற்றிபோற்றி.

வசனம்.

இராஜராஜாக்கள் பூஜிதம்பெறும் மஹாராஜராஜேஸ்வரா! எங்களை யாது காரணமாக வரவழைப்பதாயினீர்? யாங்கள் கவனித்தறிய விபரமாய்ப் புகல்வீர்.

## இராஜன்சொல்வது

விருத்தம்.

வையகத்தோர்மதிக்கும் வாகடநூலுணர்ந்து
மெய்யினிற்றோன்றும்பொல்லா வியாதியைத்தீர்த்துகார்க்கும்
பொய்மொழிபுகன்றிடாத புனிதமாகுணத்தின்மிக்க
துய்யரேயானுமக்குச் சொல்வதைகவனிப்பீரே.

வசனம்.

ஐயா! சித்தர்களாலியற்றிய வைத்திய வாகட சாஸ்திர புராண நூலனைத்துங் கற்றுணர்ந்து காசினியோர்கட்கு வியாதியணுகாமற் காப்பாற்றும் வைத்தியரே யான் புகல்வதைச் சற்று கவனமாய்க் கேட்பீர்.

(வைத்தியர்-வ-ம்) அவ்விதமே கவனிக்கின்றோம் புகல்வீர்ராசே!

## இராஜன் சொல்வது

தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

எந்தன்மனவருத்தமெல்லாம் புகலுவேனா
இன்புடன்கேட்பீரே

அநுபல்லவி

சுந்தரகாஸ்மீகர் தேசுத்தையாண்டிடும்
சுகுணனெந்தனுக்குற்ற துன்பத்தைகவனிப்பீர் (எந்)

சரணங்கள்.

அருந்தவஞ்செய்துயான் ஐயன்கிருபையினால்
அன்பாய்ப்பெற்றயெந்தன் அழகானபுத்திரி
வருத்தமாய்த்தேகத்தில் வாய்ந்தவியாதியினால்
மர்ணமெய்துவனென மதித்துதுயருறும் (எந்)

பித்தமதிகரித்து பிராணன்திடுக்கிடவே
பிடியன்னமும்புசியா திருப்பதினாலெந்தன்
சித்தம்பிரானதையா ஜீவன்நிலைக்குமோ
சிந்தித்துரைப்பீர்கள் தீவிரமாகவே (எந்)

வசனம்.

வைத்தியரே யான் புகன்றவை யனைத்துங் கவனித்தீரன்றோ? ஆகையால், இத்தருணமே எனது அருந்தவப்புத்திரியின் திரேகம் சவுக்கியமா யிருப்பதற்குத் தகுந்த மருந்துகளைக் கொடுத்து இரக்ஷிப்பீராகில் உமக்கு வேண்டிய பொன் பொருள் வெகுமதியாகத் தருவேன். இது உண்மையென்றறிவீர்கள்.

(வைத்தியர்-வ-ம்) அப்படியே மஹாபாக்கியம் அரசே.

---

பொது விருத்தம்.

மன்னனிவ்விதம்புகல மாநிலத்தோர்
மதிக்கும்சிறப்பெய்திய வைத்தியர்களெல்லாம்
இன்பமாய்த்தம்மிடமிருக்கும் மருந்தைத்தந்தும்
ஏதேனும்சவுக்கிய மாகாமையாலே
கன்மானுசாரத்தால் வந்தநோயை
காசினியோர்தீர்ப்பதற்கு ஆகாதென்று
அன்பாகஅரசனுக்குச் சொல்லிவிட்டு
அவரவர்களிருப்பிடத்திற் சேகினரே.

வசனம்.

கேளுங்களையா சபையோர்களே வாகட நூலனைத்துங் கற்று கீர்த்திப்பிரகாசமாய்த் தொல்லுலகோர்புகழும் வல்லமையுடைய வைத்தியர்கள் தம்மிடத்திலிருக்கும் அநேகவிதவிதமாகிய மருந்துகளைக் கொடுத்தும் இராஜகுமாரத்தியின் திரேகம் சவுக்கியமாகாமையால் வைத்தியர் அரசனுக்குச்சொல்லும் விதங்காண்பீர்.

## வைத்தியர் சொல்வது

விருத்தம்.

மன்னர்கள்புகழ்ந்துரைக்கும் மாநிலந்தனிற்சிறந்த
அன்பு முங்கர்ஸ்மீகர்தேச அரசனேசொல்லக்கேளும்
என்னென்னமருந்தீந்தாலும் எதினாலும்வியாதிநீங்கி
கன்னியும்சுகப்படாத காரணமாயிற்றையா.

வசனம்.

மாநிலம்புரக்கும் மஹா ராஜராஜேஸ்வரா! எங்களிடமிருக்கும் சகல விதவிதமாகிய மருந்துகளைத் தந்தும், இராஜகுமாரத்தியின் திரேகம் சவுக்கியமாகவில்லையே இனி யாங்களென்ன செய்வோம் மஹாப்ரபு.

இராஜகுமாரத்தியின் திரேகத்தை சவுக்கியப்படுத்த
தம்மாலாகாதென்று வைத்தியர்போனபிறகு
இராஜன்முன் சுந்தர்வருவது.

(சுந்தர்-வ-ம்) நமஸ்காரம் மஹாராஜராஜேஸ்வரா.

(இராஜன்-வ-ம்) கல்யாண். இந்த ஆசனத்தில் அமருவீர்.

(சுந்தர்-வ-ம்) அரசே! யான் வியாதியஸ்தர்களைச் சவுக்கியப் படுத்தும் வைத்தியர்களிற் சிறப்புற்றோங்கிய கீர்த்திப்ரகாசனென் றவனியோர் புகழ்ந்துரைக்குந் தன்மையாய் அநேக தேசங்களிற் பெருமை வாய்ந்திருக்கின்றேன். ஆயினும், தமது அருந்தவப் புத்திரிக்கு திரேகசவுக்கியமின்றியதால் அநேக வைத்தியர்கள்வந்து தம்மால் சவுக்கியப்படுத்த முடியாமற் போய்விட்டாரென யான் கேள்வியுற்று வருகலாயினேன்.

(இராஜன்-வ-ம்) ஐயா! வைத்தியரே நீர் நீகன்றவை யனைத்தும் உண்மையே. நீர் எனது குமாரத்தியின் திரேகத்தை சவுக்கியப்

படுத்துவீராகில் அந்தப் பெண்ணை உமக்குத் திருமணஞ்செய்து இந்த காஸ்மீகர் தேசத்தையும் நீர் பரிபாலனஞ் செய்யும்படியாக மகுடாபிஷேகஞ் செய்துவைக்கின்றேன்.

## பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் இராஜன் புகன்றவை யனைத்துங் கவனித்த சுந்தர் மனமகிழ்ந்து இனி நமக்கு ரிஷீஸ்வரர் கிருபையால் நற்காலம் வருகுமென மனமகிழ்ந்து ரிஷீஸ்வரர் தன்னிடந் தந்த விபூதியை இராஜகுமாரத்தியின் முகத்தில் தூவினவுடனே அநேக நாளாய்த் தீராமலிருந்த வியாதியெல்லாம் "பருதியைக்கண்ட பனிபோற்" தீர்ந்து அழகானந்த தேஜஸமைந்த சுந்தரமா யிருப்பதைக்கண்ட இராஜன் மனமகிழ்ந்து சொல்லும்விதங்காண்க.

## இராஜன் சொல்வது

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

தர்ணியோர்புகழ்ந்திடும் தர்ம்மவைத்தியரேயுன்
சமர்த்தையென்னென்று சொல்வேன்

அநுபல்லவி.

பரமனைப்போலிந்தப் பாரில்வசிப்போர்கள்
மரணமெய்தாமலும் பிராணனைக்காப்பாற்றும் (தரணி)

சரணங்கள்.

புத்திரவாஞ்சையாலென் புத்திசிதறுண்டு
பூலோகந்தனிலுய்வ தினியெவ்விதமென்று
சித்தந்திடுக்கிட்டு ஜீவன்துடிதுடித்து
சிந்தைத்துயருறு மென்தனைரக்ஷித்த (தரணி)

அவனியில்வாழ்வோரை அன்புடன்காப்பாற்றும்
அமரர்கணேயரோ ஆதிஜெகதீஸரோ
பவபந்தமகற்றிய தவமுனிசித்தரோ
பக்ஷமாய்வந்தீரென் நகர்செய்தபாக்கியம் (தரணி)

சுந்தரமாகத் துலங்குஞ்சொரூபாயென்
சொற்பிசகாமலென் சுபுத்திரியைமணந்து
இந்நகரத்திற்கு இராஜனாகயிருந்து
இன்பாயரசுரிமை அன்பாய்ப்புரிவீரையா (தாணி)

வசனம்.

ஐயா வைத்தியரே உமது வல்லமையைச்சொல்வதற்குத் தொல்லுலகோராலுமாகாது. ஆயினும யானுமக்குச்சொன்னவிதமேஎன் குமாரத்தியை விவாகஞ்செய்துக்கொண்டு இந்த காஸ்மீர்தேசத்தையும் பரிபாலனஞ் செய்துக்கொண்டிருப்பீர்.

(சுந்தர்-வ-ம்) அரசே! நீர் மொழிந்தவை யனைத்தும் உண்மையே ஆயினும், யான் முன்னதாக இந்நகரத்தைப் பரிபாலனஞ் செய்யும்பொருட்டு சிம்மாசனத்தமர்ந்து மணிமகுடஞ்சிரசிலணிந்து துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனமாய் மநுநீதிதவராமல் அரசாக்ஷிசெய்து இராஜரீகத்திற்கியன்ற நியாயநுட்பங்களனைத்துங் கவனித்துணர்ந்த பின்னர் விவாகஞ் செய்துக்கொள்ளுகிறேன். ஆயினும், தற்சமயம் உலகமெங்கும் முரசறைந்து வியாதியஸ்தர்களை வரவழைப்பீராகில் லோகோபகாரமாக அவரவர்கள் திரேகத்தைச் சவுக்கியப்படுத்தி யாவரும்மனமகிழநற்சுபமுகூர்த்தத்தில் மணிமகுடஞ்சிரசிலணிந்து சிம்மாஸனத் தமர்ந்து இராஜரீகஞ் செய்துக்கொண்டிருக்கின்றேன். இராஜேஸ்வரா.

(இராஜன்-வ-ம்) மஹாசந்தோஷம்! அவ்விதமே உமது இஷ்டத்தைப்போல வியாதியஸ்தர்களனைவரையும் வரவழைக்கின்றேன். அவர்களனைவரையும் சவுக்கியப்படுத்திவிட்டு இந்நகரத்தைப் பரிபாலனஞ்செய்வீர் மஹாப்ரபு.

## இராஜன்சொல்வது

விருத்தம்.

மந்திரியுரைப்பக்கேண்மோ மாநிலந்தனிற்பிறந்து
சிந்தையுந்துடி துடித்து ஜீவனுக்கபாயமுற்று
வந்திடும்வியாதியஸ்தர் வல்வினைதீர்ப்போமென்று
எந்ததேசத்தினர்க்கும் இன்புடன்தெரிவிப்பாயே.

வசனம்.

மந்திரி! எனது அருந்தவப் புத்திரியின் வியாதியைத் தீர்த்து பகவானைப்போற் காப்பாற்றி இரக்ஷித்த பெருமைபொருந்திய இம் மஹானுபாவரை இந்த காஸ்மீகர்தேசத்தின் அரசனாக நியமிப்பதற் கிசைந்தமையால் இவர் சொற்படியே மாநில மெங்ஙனுமுள்ள வியாதியஸ்தர்களை இந்நகரத்தில் வந்து திரேக சவுக்கியப் படுத்திக் கொண்டுபோவீரென யாவருக்குந்தெரியப்படுத்துவாய்.

(மந்திரி-வ-ம்) அப்படியே மஹாசந்தோஷம் இராஜ ராஜாக்கள் பூஜிதம்பெறும் மஹாராஜேஸ்வரா.

## பொது-விருத்தம்.

அரசனிவ்வாறிசைப்ப அமைச்சனுந்தான்
அவ்விதமேநல்லதென்று சம்மதித்து
தரணியில்வாழ் கூன்குருடர்செவிடரூமை
தங்களுபத்திரமகற்றிக் காப்போமென்று
முரசடிததெங்கினுமபுகல வெறியரோடும்
மூக்கிழந்தோன்கண்ணிழந்தோன் சொஸ்தமாக
இரக்ஷிலாதுணையென்றே காஸ்மீகர்க்கு
இன்பாகயெல்லோரும் வந்திட்டாரே.

வசனம்.

கேளுங்களையா சபையோர்களே இவ்விதமாக இராஜன் மொழிந் தவை யனைத்துங் கவனித்துணர்ந்த மந்திரியும் அவ்வாறே நன்கெனச் சம்மதித்து தலையாரிக்குச் சொன்னவுடனே அவன் சகலதேச தேசங்களுக்குந் தெரிவித்தமையால் நாள்தோறும் வியாதியஸ்தர்க ளனைவரும்வந்து திரேசசவுக்கியம் செய்துக்கொண்டு போகையில் ஓர்நாள் தெய்வாதீனமாய் நாசியிழந்த படூரும், கண்ணிழந்த ரவ்வடனும், அப்துல்அசீசும், பைத்தியம்பிடித்த ஆஜம்ஷாவும், வீரப் பிரதாபனும் காஸ்மீகர்தேசத்திற்கு வருகின்றவிதங்காண்பீர்களையா கனவான்களே.

---

(படூர்-வ-ம்) சலாம் மஹாப்ரபு.

(இராஜன்-வ-ம்) எங்ஙனமிருந்து வருகலாயினீர்? உமக்கென்ன வியாதியோ? விபரமாய்ப் புகல்வீர்.

### படேர் சொல்வது

விருத்தம்.

கனஞ்சேருங் காபிரிதேசத்தில்வாழும்
கருதுபுகழிலகு படேரென்பேரையா
எனதெஜமான் தேவியையபிச்சித்தேனென்று
எனதுநாசியை யறுத்தாராகையாலே
உனதுசமுகந்தேடி வந்திப்போது
உற்றதுரைத்தேனையா உண்மையாக
மனமகிழவென்மூக்கை சொஸ்தஞ்செய்தால்
மறவேனேவிஸ்வாசம் மதியுள்ளோரே.

வசனம்.

ஐயா! யான் வசிப்பது காபிரிதேசம். என்பெயர் படேர். யான் ஒருநாள் எனது எஜமான் பத்தினியை அந்நியதேசத்திற்கு அழைத்துச் செல்வதற்கு ஆலோசித்திருக்கையில் அவர் திடீரென வந்து எனது நாசியை யறுதது துரத்தினரையா. ஆயினும், எனது மனவருத்தத்தை உம்மிடதத்திற் சொன்னேன். ஆகையால், நீங்கள் என் நாசியை சவுக்கியப் படுத்துவீராகில் உமக்கு வெகு தர்ம்மமாகும் மஹாப்ரபு.

### சுந்தர் சொல்வது

விருத்தம்.

அநுதினமும் அன்னமளித் துணைவளர்த்து
ஆதரித்தவனெஜமான் மனையாளின்னும்
தனதம்மான்குருதமயன் ராஜன்தேவி
தாயாகுமவர்களை இச்சிக்கலாமோ
மனுதர்ம்மசாஸ்திரநூல் கற்றுணர்ந்தும்
மதியில்லாப்பேயனு யிருந்ததாலே
உனதுநாசியையறுத்துத் துரத்திவிட்டார்
உண்மையா யினிமேலிப்பழிதேடாதே.

வசனம்.

ஆ! ஹா! இஃதென்ன அநியாயம்! மாநிலத்தில் மனிதராய்ப் பிறந்தவர்களெல்லாம் மனுதர்மசாஸ்திரவிதிப்படி நற்குணத்தினரா

யிருப்பாராகில் இகத்திற் கீர்த்தியும் பரத்தில் முக்தியும் பெறுவர் அஃதன்றி மதியீனத்தினால் மாமன்பத்தினி, குருபத்தினி, தமையன்பத்தினி, இராஜன்பத்தினி, நாள்தோறும் அன்னங்கொடுத்து ஆதரித்திரக்ஷிக்கும எஜமான்பத்தினியாகிய. இவர்களை யெல்லாம் தாயென மதியாமல் துர்க்குணத்தினாற் பழிதேடிக்கொள்வது பாபமல்லவோ? ஆகையால், உனது மனோக்ர்வத்தினால் உனது நாசியை யறுத்துத் துரத்தலாயினர்ஆகையால், இனி எப்போதும் இத்தகைய துர்க்குணம்வாய்ந்த அற்பமதியால் பழிதேடிக்கொள்ள வேண்டாம் மதியீனனே.

(படேர்-வ-ம்) ஐயா! வைத்தியரே! இனி எத்தருணமும் துர்க்குணத்தைத் துணையாய் வந்ததுத துயரடையேன். ஆயினும், இத்தருணமெனது நாசியை சவுக்கியப்படுத்துவீரையா.

(சுந்தர்-வ-ம்) நல்லது சவுக்கியப்படுத்துகிறேன்அந்தப்பக்கத்தில் நிற்பீர்.

(படேர்-வ-ம்) மஹா சந்தோஷம். வையத்தோர்க்குற்ற வியாதியை தீர்த்திரக்ஷிக்கும் வைத்தியரே.

---

(ரவ்வடன்-வ-ம்) சலாம் மஹாப்ரபு.

(இராஜன்-வ-ம்) நீர் யாதுகாரணமாகவந்தீர் உமக்கென்ன வியாதி தெரியப்படுத்துவீர்.

ரவ்வடன் சொல்வது.

விருத்தம்.

இப்படியென்தேவி சுந்தரியைப்பார்த்து
  இச்சித்தானிவன்மூக்கைத் துணித்துவிட்டேன்
அப்போதென்மனையாளென் முகத்தின்மீது
  அடித்தனளையாவதனாற் கண்கலங்கி
எப்போதும்பார்வையிலா குருடனாகி
  என் துயரமிக்கல வேண்டுமென்று
இப்போதுமின் முகம் வந்தேனையா
  இக்கண்ணை சொஸ்தஞ்செய்தனுப்புவீரே.

வசனம்.

ஐயா! இந்தப் பமேரென்பன் ஓர்நாள் எனது மனையாளாகிய சுந்தரியைப் பார்த்து பெண்ணே யாம் மறுநகரிற்சென்று மனோல்லாசமாய் வாழ்ந்திருப்போம் வருவாயென்றழைக்க அத்தருணம் யான் கோபாவேசததுடன்வந்து இவனுடைய நாசியை யறுத்துத்தூரத்த சுந்தர் எனது முகத்திலறைந்து கண்ணைக் கலக்கிக் குருடனாகச் செய்தமையால் என் மனமெலிந்து உமது சமுகத்தைநாடிவந்தேன் ஆகையால் எவ்வித மாயினும் பார்வை குன்றாமல் எனது நேத்திரத்தை சவுக்கியப்படுத்தி யனுப்புவீரையா.

சுந்தர் சொல்வது

விருத்தம்.

தினமுனக்குவூழியஞ்செய் திருக்குமிந்த
திக்கில்லான் நாசிதனையறுத்ததோஷம்
உனதுநேத்திரமழிய லாச்சுதையா.
உதவாதுகொலைபுரியும் மார்க்கமென்று
மனந்தனிலேயிம்மொழியை பதனஞ்செய்து
மாநிலத்திலனுதினமும் தர்மஞ்செய்து
சினமின்றிவாழ்ந்தாலே மோக்ஷலோகம்
சித்திக்குமென்றறிவீர் மதியுள்ளோரே.

வசனம்.

ஆ! ஹா! இஃதென்ன விபரீத ஆச்சர்ய காக்ஷியாயிருக்கின்றதே பகவானைப் பணிந்து அருந்தவஞ்செய்துபெற்ற அன்னை தந்தையை விடுத்து நீயே கதியென்று நாள்தோறும் உன்னிடத்தில் ஊழியஞ் செய்து பிழைத்திருந்த ஏழையானவன் அறிவின்மையால் யாதேனும் ஓர் குற்றமபுரிவானாகில் அவனுக்கியன்ற நன்மதி புகன்று சீர் திருத்தஞ்செய்யாமல் நின் அற்பமதியால் இவனுடைய நாசியை அறுத்துத் தூரத்தியதால் பகவானுக்கிணையின்படி தெய்வாதீனமாய் உனக் கித்தகைய ஆபத்தெய்தி கண்ணிழந்த குருடனாகித் துயரப் படலானாய். ஆகையால், இனி எத்தருணமும் இத்தகைய அநியாய மார்க்கத்தில் மனதைச் செலுத்தாமல் சத்விஷயமாய் இத்தரணியில் வசித் திருப்பீராகில் இகத்திற் கீர்த்தியும், பரத்தில் முக்தியும் பெறுவீர்.

(ரவ்வடீன்-வ-ம்) ஐயா! வைத்தியரே இத்தருணமெனது நேத்திர பார்வை விளங்கும்படியாகச் செய்வீராகில் இனி எத்தருணமும் இத்தகைய குரூரகுணத்தினால் அநியாயம்புரியாமல் அவனியில் ஆவியுடன் ஜீவித்திருக்கும்வரையினும் பகவத்தியானஞ் செய்துக் கொண்டிருப்பேன்.

(சுந்தர்-வ-ம்) சரி! அவ்விதமே சவுக்கியப்படுத்துகிறேன் அவன் பக்கத்திலிருப்பாய்.

(ரவ்வடீன்-வ-ம்) அப்படியே மஹாபாக்கியமையா.

---

(அப்துல்அசீஸ்-வ-ம்) சலாம் சாஹேப்.

(இராஜன்-வ-ம்) நீர் ஆரையா? உமக்கென்ன வியாதி? யாது காரணமாக இங்ஙனம் வருகலாயினீர். விபரமாய்ப் புகல்வீர்.

## அப்துல்அஸீஸ் சொல்வது

### விருத்தம்.

எனதுகுமாரத்தியெந்தன் மருகனான
எதிரிருக்கும்ரவ்வடீன் நேத்திரத்தை
தனதுவிரலாற்குத்திக் கலக்கிவிட்டாள்
தற்சமயமெனக்கதனை தெரியச்சொன்னான்
சினமுற்றென்புத்திரனை யனுப்பியன்றே
சிறிதேனும்தயையெண்ணா கொல்லச்சொன்னேன்
மனமறியச்செய்த அநியாயத்தால்
மழுங்கினதையாநேத்ர பார்வைதானே.

### வசனம்.

ஐயா! சுந்தரியென்னும் எனது குமாரத்தியை இந்த ரவ்வடீனென்பவருக்கு விவாகஞ்செய்துவைத்துயான்வர்த்தகஞ்செய்வதற்குப்போய்விட்டமையால் இவர்களுக்குஏதோ சச்சரவினால் எனது குமாரத்தி இவருடைய முகத்திலறைந்து நேத்திரபார்வையில்லாத குருடனாகச்செய்ததாக நிருபமனுப்பியதால் யான் அந்நிருபத்தைக் கண்டு தீரவிசாரியாமல் எனது புத்திரனை யனுப்பி சுந்தரியைக் கொன்றுவிடும்படியாக அனுப்பினேன் அன்றைய தினத்திலிருந்து

நேத்திர பார்வையில்லாத அந்தகனு யிருக்கின்றேன். ஆகையால், எனது நேத்திரத்தை சவுக்கியப்படுத்துவீராகில் பகவானுமக்குத் துணைசெய்வாரையா.

சுந்தர் சொல்வது

விருத்தம்.

எப்போதும்பாராம லொன்றைச்செய்தால்
ஏற்கெனவேகேடுவரு மாகையாலே
தப்பிதத்தையறியாமல் கொல்லச்சொன்ன
தயையில்லாமனத்தினனே மனிதராஞேர்
இப்புவியிலுதித்தாலுந் தர்மஞ்செய்து
இயல்புறவே ஞானத்தோடிலகவேண்டும்
செப்பினேனினியேனும் நியாயமாக
ஜெகந்தனிலே வாழ்வதற்காலோசிப்பீரே.

வசனம்.

(சுந்தர்-வ-ம்) ஐயா! உலகிற் பிறந்த மாந்தர்கள் யாதொன்றையும் கவனித் துணர்வதற்காக அறிவுவிளங்குகின்றமையால் நீர் பெரியவராயிருந்தும் "மதியில்லா மிருகத்தைப்போல" பெண்ணென்றால் பேயுமனமிரங்கு மென்பதையுங் கவனித்துணராமல் உனது புத்திரனையனுப்பி சுந்தரியைக் கொல்வதற்குச்சொன்ன அநியாயத்தினல் உனது நேத்திரபார்வையிழந்து துயரப்படலாயினை. ஆதலின் இனி எத்தருணமும் இத்தகைய துர்க்குணத்தைவகித்துத் துன்பமெய்தாமல் தரணியி லுயிருட னிருக்கும் வரையினும் சாந்தமனதுடனே விளங்கி, பகவத்தியானம் செய்துக்கொண்டிருப்பீராகில் இகத்திற் கீர்த்தியும் பரத்தில் முக்தியுமெய்துவீர்.

(அப்துல்அசீஸ்-வ-ம்) ஐயா! இனி யான் எத்தருணமும் இத்தகைய அநியாயத்திற்கு உடன்பட மாட்டேன். எனது நேத்திரத்தை சவுக்கியப்படுத்துவீரையா.

(சுந்தர்-வ-ம்) சரி! அவ்விதமே சவுக்கியப்படுத்துகிறேன் இவர்களுடனே நின்றிருப்பாய்.

(அப்துல்அசீஸ்-வ-ம்) அப்படியே மஹாபாக்கியமையா! தர்மவைத்தியரே.

(துர்க்குணமந்திரி-வ-ம்) சலாம் சாஹேப்.

(இராஜன்-வ-ம்) நீங்களாரையா! எங்ஙன மிருந்து வந்தீர்? உமக்கென்ன வியாதி? விபரமாய்ப்புகல்வீரையா.

## மந்திரி சொல்வது.

### விருத்தம்.

வனந்தனிலோர்நாள்வேட்டையாடும்போது
வர்னமயிலினைப்போன்ற சுந்தரென்பாள்
மனமெலிந்தெவ்விதம்பிழைப்ப தென திகைக்க
மஹாராஜனன்புடனே அழைத்துவந்து
தனதில்லந்தனிலிருத்த வோடிவிட்டாள்
சஞ்சலத்தாலிவ்வரசன் மனந்திகைக்க
கனஞ்சேருமுன்சமுகம் வந்தோமிந்த
காவலனார்பயித்தியந்தீர்த் திரக்ஷிப்பீரே.

### வசனம்.

ஐயா! இவர் அம்தாநகரத்தரசன் யான் இவருடைய மந்திரி. ஓர் நாள் யாங்கள் வேட்டையாடுதற்குக் கானகத்திற்குச் செல்லுந் தருணம் வழியிலெதிருற்ற நந்தவனச்சோலையில கந்தர்வஸ்திரீயைப் போன்ற சுந்தரென்னும் ஓர் கன்னிகை தனிமையாய் வந்திருந்து இனி நாம் எவ்விதம ஜீவிப்போமென, மனந்திகைத்து துயரப்படுவதைப்பார்த்து தர்மகுணமுளளாகிய இந்த அரசன் பரிதாபத்துடன் மனமிரங்கி அந்தப் பெண்ணைத் தனது அரண்மனையில் அழைத்துச்சென்று அன்னவஸ்திரந்தந்து ஆதரித்திரக்ஷித்து சிலநாட்சென்றதின்பிறகு திருமணம்புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்பதற்கு ஆலோசித்திருக்கையில் அந்தப் பெண் எங்ஙனமோ ஓடிப்போனதினால இவருடைய மதிமயங்கி பயித்தியம்பிடித்துத் திரிகின்றனர் ஆகையால், இனி எவ்விதமாயினும் இவரைச் சவுக்கியப்படுத்தி அனுப்புவீரையா.

(சுந்தர்-வ-ம்) அடடா! குரூரகுணத்தினனே இவரை அவர்களுடனே நிற்கச்செய்வாய். இன்னுஞ் சற்றுநேரத்தில் யாவரையும் சவுக்கியப்படுத்தி அனுப்பி விடுகிறேன்.

(மந்திரி-வ-ம்) அப்படியே மஹாபாக்கியமையா.

மாளிகையிலிருந்து சுந்தர் காஸ்மீகர்தேசத்திற்குப்
போய்விட்டபிறகு வீரப்பிரதாபன்
தேடிக்கொண்டு வருவது.

---

(வீரப்பிரதாபன்-வ-ம்) ஆ! இஃதென்ன ஆச்சரியம் மாளிகையி லிருந்த சுந்தர் எங்ஙனஞ்சென்றனளோ? அறிகிலேனே. அன்றியும் நாம் எவ்விதமாயினும் சுந்தரியை எந்த தேசத்திலாகிலும் தேடிப் பார்த்து அழைத்துக்கொண்டு வருவோம்.

வீரப்ரதாபன் சொல்வது

தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கேசென்றாயோ—சுந்தர்
எனைமறந்தாயோ

அநுபல்லவி.

திங்கள்முகக்காந்தி தேஜஸமைந்திடும்
சிங்காரியென்மனம் திகைத்திடலானேன் (எங்)

சரணங்கள்.

தரணியோர்புகழும்—மாதே
தங்கமயவடிவே
அரசர்கள்யாவரேனும் அன்பாயிங்ஙனம்வந்து
அழைத்துச்சென்றார்களோ யாதுந்தெரியேனே (எங்)

உன்னைப்பிரிந்தினியான்—இந்த
உலகிலிருப்பேனோ
என்னசெய்வேனினி எங்ஙனந்தேடுவேன்
அன்னமேசொர்ணமே அழகுமயிலினமே (எங்)

மனமுந்திடுகிறதே—ஜோதி
மதிப்ரகாசவதனி
உனதாசையாலெந்தன் உற்றாரையுமவிடுத்து
ஊர்களதோறும உனைத்தேடலானேன் (எங்)

வசனம்.

ஆ! விதிவசமே நமக்குக் கானகத்தில் தெய்வாதீனமாய் அகப்பட்ட கந்தர்வஸ்திரீயைப்போன்ற சுந்தரியைக்காணுமல்ஆற்ரெணு விசனமெய்தி ஆரண்யமெங்ஙனுந் தேடித்திரிந்தும அகப்படவில்லையே. ஆயினும், இந்தக்காஸ்மீகர்தேசத்தில் யாவரோ ஓர் மஹான் வந்திருப்பதாகவும் வியாதியஸ்தர்கட்கு யாதொரு மருந்துங்கொடாமல் விபூதியை முகத்திறறுவி சவுக்கியப்படுத்துகிரு ரென்றும் தரணியில் வசிக்கும் சகல மனிதர்களும் புகல்வதால் யாமும் அங்ஙனஞ்சென்று நமது மனவருததத்தைச் சொல்வோமாகில மிகவும் நலமாயிருக்கும் இதுதான் தகுந்த யோசனை.

---

(வீரப்ரதாபன்-வ-ம்) சலாம் சாஹேப்.

(இராஜன்-வ-ம்) ஐயா! நீர் எங்ஙனமிருந்துவந்தீர். உமக்கென்ன வியாதி விபரமாய்ச் சொல்வீர்.

## வீரப்ரதாபன் சொல்வது.

விருத்தம்.

ஐயனேசுந்தரென்னும் அழகியைக்காணுதிந்த
வையகமெங்குந்தேடி வருத்தமாயிங்குவந்தேன்
பொய்மொழிபுகன்றிடாத புனிதரேயென்கருத்தை
துய்யரேமொழிந்தேனெந்தன் துயர்தீர்த்துரக்ஷிப்பீரே.

வசனம்.

ஐயா! ஓர்நாள் கானகத்தில் எனக்குத்தெய்வாதீனமாய்கிடைத்த சுந்தரென்னும் ஓர் கன்னியை யான் அழைத்துக்கொண்டுவந்து எனது மாளிகையிலிருக்கும்படியாகச் சொன்னேன் அப்பால் அந்தப் பெண்ணைக்காணுமல் சகலதேசதேசங்களிலுந் தேடிக்கொண்டு வருகையில, சிலர் இந்த காஸ்மீகர்தேசத்தில் தெய்வத்தன்மைவிளங்கிய ஓர் மஹான் வந்திருப்பதாகவும், அவரால் அநேகர் மனததுயரின்றி மாநிலத்தில்ஜீவித்திருக்கிருரென்றுங்கேள்வியுறறு வந்தேன் ஆகையால் அந்த சுந்தரி இருக்கும் தேசத்தை எனக்கு விபரமாய்ச் சொல்லவேண்டும் பஹாப்ரபு.

(இராஜன்-வ-ம்) ஐயா! வைத்தியரே இஃதென்ன ஆச்சரியம்? இவர்களனைவரும் சுந்தரென்னும் பெண்ணைக்குறித்து என்னென்னமோ சொல்லிக்கொண்டிருக்கின்றார்களே இஃதுண்மையாதோ? வென வெனக்குஞ் சந்தேகமாயிருக்கின்றது.

(சுந்தர்-வ-ம்) ஐயா! அந்த சுந்தரென்னும் பெண்ணின் சரித்திரமனைத்தும் இன்னுஞ் சற்றுநேரத்தில் யாவருங்கவனிப்பீர் இந்த வேடப் பாவனையைப் பிரத்தியட்சத்துடனே நீக்கச்செய்வீர்.

## பொது-விருத்தம்.

அன்புடனேயாவர்களும் நின்றிருக்க
 அருந்தவத்திற்சிறந்தமகா ரிஷிகள்தந்த
நன்மைபெறும்விபூதியை அவர்மேற்றூவி
 நலம்பெறவே சவுக்கியமாயிருக்கச்செய்து
முன்போலஸ்திரீரூப மாகவந்து
 மேதினியிற் றான்பிறந்து துயரடைந்து
இன்பாககாஸ்மீர் நகரில்வந்து
 இருப்பதையும் விபரமாய்ச் சொல்வதானாள்.

### வசனம்.

கேளுங்களையா சபையோர்களே! இவ்விதமாய் சுந்தர் தன்னிடத்திலிருக்கும் விபூதியால் வந்திருக்கும் வியாதியஸ்தர்களனைவரையும் சவுக்கியப்படுத்திவிட்டு மனோவாக்குக் காயமிம்மூன்றினாலும் பக்திவிஸ்வாசமாய் அருந்தவத்திற்சிறந்த மகாரிஷிகளைத்தியானித்து தனது சுயரூபம் விளங்கும்படியாகப்பிரார்த்தித்தலும் உடனே யாவருங்கண்டு அதிசயிக்கும்படியாக தவமுனிவர் கிருபையால் தனது சுயரூபமாகிய ஸ்திரீரூபமாயிருப்பதைப்பார்த்த பதேர், ரஸ்வுடீன், அப்துல்அஸீஸ், அலிபக்ஷ், வீரப்பிரதாபன், அரசன், மந்திரி முதலான சகலரும் ஆச்சரியமாய் ஒன்றுந் தோன்றாமலிருக்கவும் காஸ்மீர்தேசத்தரசன் சுந்தரியைப்பார்த்து அம்மணி நீ! புருஷரூபமாயிருந்து இத்தருணம் ஸ்திரீரூபமானதற்குக் காரணம் யாதோ? நான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வாயென, சுந்தரி தனது பால வித்தியாசகத்தினாலடைந்த கஷ்டநிஷ்டூரம் யாவும் விபரமாய்ச் சொல்லுவதாயினள்.

## சுந்தர் சொல்வது

தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

எந்தன்சரித்திரம்விபரமாய்ச் சொல்கின்றேன்
எல்லோருங்கேட்பீரே

அநுபல்லவி.

தந்தைதமயனுடன் தைரியமாகவே
சிந்தைமகிழ்வாக வந்துதுயரடைந்த (எந்)

சரணங்கள்.

கனத்தவர்த்தகஞ்செய்ய கப்பலேறிச்சென்று
காற்றுமழையினாலே கடலில்யாவரும்வீழ்ந்து
அனர்த்தமென்றேநீந்தி அனைவருங்கரைசேர்ந்து
அல்லாதுணையென்று அன்பாய்த்துதித்திருந்தோம (எந்)

அந்நாளிப்பபேர்வந்து அஞ்சாதீரென்றெம்மை
அழைத்துச்சென்றெந்தனை மணஞ்செய்தாரிவருக்கு
சிந்தைமகிழாக வாழுமநாளிற்பபேர்
செலவோமறுநகர்க்கு வருவாயென்றழைத்திட (எந்)

முனிந்துவ்வடனிவன் மூக்கறுத்திடயெந்தன்
முன்கைவிரலநகத்தா லிவர்கண்ணிழந்திட
அனைத்துமுமணராத்தந்தை வார்த்தையினாலென்னை
ஆரண்யந்தனிலெந்தன் தமையன்விடுத்தேக (எந்)

வனத்திலிவ்வரசனும் வந்தெந்தனையழைத்து
வையத்தோர்புகழ்ந்திட மணம்புரிவோமென
எனக்குற்றவிரதமும் இன்பாயனுஷ்டித்தபின்
இராஜேஸ்வராயுந்தன் இஷ்டமெனப்புகன்றேன் (எந்)

அன்பாயென்னிடமிந்த மந்திரியோர்நாள்வந்து
அந்நியதேசஞ்சென்று பிழைப்போம்வருவாயென
அரசபுத்திரன்பார்த்து அதட்டிமிரட்டவும்
அவனையிவன்கொன்றதால் பயந்துமூர்ச்சையாகினேன் (எந்)

சவம்போற்கானகத்தி லிருக்கையிற்படுமெனங்பான்
தண்ணீரருந்தச்செய்ய உயிர்பெற்றெழுந்திருந்தேன்
இவரென்னைமணம்புரிந் திருப்பாயென்றுரைக்கவும்
எனதுயிர்விடுத்திட மனந்துணிந்தேனையா (எங)

அந்நாள்ரிஷிசள்வந்து அளித்தாரிவ்விபூதி
ஆண்வேஷத்தாலெங்கும் சுற்றிதிரிந்துவந்து
இந்நாளுன்புத்ரியை இரக்ஷித்தேனென்விதி
இரகுலுல்லாயறிவாரே இராஜராஜேஸ்வரா (எங)

வசனம்.

ஐயா! இராஜராஜாக்கள் பூஜிதம்பெறும் மஹாராஜேஸ்வரா! மாநிலத்திற் சிறப்புற்றோங்கிய நந்நிலமாகிய காபல்தேசத்தின் வர்த்தகனாகிய இந்த அப்துல்அலியென்பவர் எனது தகப்பன் இந்த அலிபக்ஷென்பர் எனது தமையன். எமது அன்னை இறந்துபோனதால் யாங்கள் மூவரும் வர்த்தகஞ்செய்வதற்கு ஆழிசஞ்சாரியாய்க் கப்பலேறிச் செலகையில காற்று மழையினால் கப்பலுடைந்து கடலில் வீழ்ந்து உயிரிருந்தாற்போதுமென நீந்திககொண்டு காபிரிதேசத்தின் கடற்கரையில் வந்திருக்கையில இந்தப்படுமரென்பவன் எங்களை இந்த ரவ்வடினென்பவரிடம் அழைத்துச்சென்று இவருக்குமெனக்கும் திருமணஞ் செய்துவைதத பிறகு ஒருவரும் இல்லாத தருணம் மறுநகர்க்குச செலவோம வருவாயென்றெனையழைக்க எனது மணாளன்வந்து இவர் நாசியை யறுத்துத் துரத்த என்மனவு தாளாமல இவ்விதஞ்செய்வது நீதியோவென கையைவீச விரல் நகம இவர் கண்ணிறபட்டு அந்தகனானதால் என் தந்தையாகிய இவருக்குக் கடிதமூலமாய்த்தெரிவிக்க இவர் யாதுங் கவனிததுணராமல என் தமையனாகிய இந்த அலிபகஷென்பவரை யனுப்பி என்னைக் கொன்றுவிடும்படியாய்ச்சொலல இவரென்னைக் கொல்ல மனமின்றி வனத்தில் விடுத்தேக இந்த அரசன் என்னை மணம்புரிந்துக் கொள்வாயென யான் அனுஷ்டிக்கும் விரதமுமுடிந்தபிறகு உமது மனதின்படியே யாருகவென, ஓர் நாள் இந்த துர்க்குணமந்திரி தந்திரமாயென்னை அந்நியதேசத்திறகு வருவாயென்றழைக்க அரசபுத்திரன் தடுத்தனமயால் அவனைக கொன்றுவிட்டு ஓடிப்போயினன். அந்த அநியாயத்தைககண்டு யான் திகிலுற்று பிரேதம்போல் மரண மூர்ச்சையாயிருக்கையில் இந்தப் படுமரென்பவர் தண்ணீர்கொண்டு

வந்து என்னை அருந்தச்செய்து இனி யாகிலும் என்னுடன் வருவா யென. யான் மனமிரண்டு கானகமார்க்கமாய்ச் செல்லுந் தருணம் இந்த வீரப்பிரதாபனவந்து இவரைத் துரத்திவிட்டு என்னை. தன் மாளிகையி லழைத்துச்சென்று மணம்புரிவோமெனப்புகல இன னும் சிலதினத்திற்குப் பிறகு உமதிஷ்டத்தைப்போ லாகுகவென இவரும் நல்லதென்று போனபிறகு என் தலையை யுடைத்துக் கொள்வதற்கு கற்பாரையைக் கையிலெடுக்கும்போது இரண்டு ரிஷிகள்வந்து என்னை புருஷரூபமாய் விளங்கும்படியாக வரந்தந்து இந்த விபூதியையுந் தந்தனர். அப்பால், யான் இந்நகரத்தில் வந்து இவர்களனைவரையும் சவுக்கியப்படுத்தினேன். ஆயினும், உமது புத்திரியை இந்தப் படுரென்பவருக்குத் திருமணஞ்செய்துவைத்து இராஜகுமாரனைக்கொன்ற துர்க்குணமந்திரியை க்கொன்றுவிடுவீர்.

(இராஜன்-வ-ம்) அப்படியே மஹாபாக்கியமம்மா.

பொது வசனம்.

கேளுங்கள் சபையோர்களே! இவ்விதமாய் சுந்தர் மொழிந்தவை யனைத்துங் கவனித் துணர்ந்த அரண்மனையி லுள்ளோ ரனைவரும் ஆச்சர்யமெய்தவும துர்க்குணமந்திரியைக் கொன்றுவிட்டு படுரெ ன்பவனுக்கு இராஜபுத்திரியைத் திருமணஞ்செய்துவைத்து சுந்தர் ரவ்வடன், அப்துல்அஸீஸ், அலிபக்ஷ், அம்தாநகரத்தரசன் வீர ப்ரதாபன் முதலானோ ரனைவரும் அறுசுவைப் பதார்த்தத்துடன் விருந்தமுதருந்தி அரசனாற் கிடைத்த ஆடை ஆபரணபொன் பொ ருள்யாவும் பெற்றுக்கொண்டு மனோல்லாசமாய் அவரவரிருப்பிடத் திற்குப்போய்ச் சந்தமும் பகவத்தியானமாய்வாழ்ந்திருந்தனர்.

## வாழி-விருத்தம்.

சூழ்புவியோர்கள்மெச்சும் சுந்தர்நாடகமும்வாழி
தாழ்விலாதருமவான்கள் தரணியிற்சிறந்துவாழி
வாழ்வுகுன்றாதிருக்கும் வானவர்ரிஷிகள்வாழி
ஏழ்மையற்றிலகும்சித்தர் எந்நாளும்வாழிவாழி.

## மங்களம்.

தரு-இ-ம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களம்—நித்தியசுப
மங்களம் மங்களம்

அநுபல்லவி.

சிங்காரலங்கார மாகவிளங்கிடும்
சிவனருள்புத்ர கணேசருக்கும்
தங்கவடிவேலைச் செங்கையிற்றாங்கிய
சண்முகானந்தன் திருவடிக்கும்ஜெய(மங்களம்)

சரணங்கள்.

இந்த்ராதிதேவர்கள் சந்திரசூரியர்
இமையவர்கந்தர்வ ரிஷி முனிசித்தர்களும்
சந்ததம்நான்மறை புகலும்வேதியர்க்கும்
சைவவைஷ்ணவ ரனைவர்கட்குமஜெய(மங்களம்)

நன்றிமறவாத சுந்தரிநாடகம்
நன்மனதாக படிப்பவர்கேட்போரும்
என்றுங்குறையிலா வாழ்ந்திருக்கச்செய்யும்
ஏழைகட்காதார மாகும்ஜெகதீஸர்க்கும்(மங்களம்)

தந்திமுகானந்த விஜயவிக்னேஸனை
சந்ததம்துதித்திந்தத் தரணியில்வாழ்
சுந்தரஜெயவீர சூரதீரகவிராஜ
கந்தசாமிபிள்ளைக் கனுதினமும்ஜெய(மங்களம்)

பார்ஸீ சுந்தர் நாடகம்.

முற்றிற்று.